ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு அங்கிரஸ-ஹு மாசி-மீ 22-உ (5—3—1933) | மலர் 45.


## லெனினும், மதமும்.



இது ருஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரசு குடும்பத்தை வேருடன் வீழ்த்தி ஏழை பணக்காரத்தன்மையை ஒழித்து, தோட்டி முதல் தொண்டைமான்வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் ஆட்சி புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடைமைக்கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாசித்துப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் ஏன் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை ஏன் அவர்கள் நாஸ்திகப்பிரசாரம்செய்பவர்களாகக்காணப்படுகிறார்கள் என்பதும், சுயமரியாதை இயக்கத்தார்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் ஏன் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்டாயை ரஷியர்கள் ஏன் வெறுத்தார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்தினால் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெறாமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்றாய் விளங்கும். ஆகவே இப்புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணா 0—3—0

விலையுடன் ஒரு அணா ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

### என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (இதன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும் நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதாகும். புகவுரை, முடிவுரையுடன் 100 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணா ... ... ... 0—8—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



# "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



புருஷர்களுக்கு அசக்தியை போக்கடித்து புருஷத்துவம் தாதுபுஷ்டி ஜீரணசக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் டானிக.

# மன்மத குளிகை

எந்தக்காரணத்தினாலும் இழந்தபலம், தாது நஷ்டம் போகசக்திக்குறைவு, மன உற்சாகம், இவைகளை திரும்பக் கொடுத்து இல்லற ஒற்றுமை விரிபவித்தி முதலியவைகளைக்கொடுப்பதில் இணையற்றது. 20 குளிகை ரூ. 2—0—0 60 குளிகை ரூ. 5—0—0.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.



குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பாம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413

Calcutta- (k)



'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை. ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:—சமத்வபோதினி டிக்கோயா சிலோன்.


குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம்

குப்பகோண மகாமகம்.

# சேலத்தில் ஈ. வெ. இராமசாமி, முத்துசாமிவல்லத்தரசு.

## வரவேற்புப்பத்திரங்கள்—பொதுக் கூட்டம்—ராசிபுரம் கூட்டம்.

தோழர் ஈ. வெ. ராமசாமி ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வந்ததை உத்தேசித்து சேலத்தில் 19-2-33-ந்தேதியில் ஒரு வரவேற்பும் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, நாகப்பட்டினம் மணி, புதுக்கோட்டை முத்துசாமிவல்லத்தரசு, ஆகியவர்கள் 19-2-33-ந்தேதி காலையில் சேலம்வந்து சேர்ந்தார்கள். சேலம் சுயமரியாதை சங்கத்தோழர்களால் ரயிலில் வரவேற்கப்பட்டு செவ்வாய்ப்பேட்டை சங்கக்கட்டிடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கு காலை சிற்றுண்டியானவுடன் சங்கக்கட்டடத்தில் இருந்து வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மண்டபமான மனுர்குல தேவாங்க பள்ளிக்கூடத்திற்கு சேலம் தாலுகா போர்ட் பிரசிடெண்ட் ராவ்சாகிப் பி. ராஜமாணிக்கம், வைஸ் பிரசிடெண்ட் எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ., பி. எல்., அவர்களும் மற்றும்பல தோழர்களும் ஊர்வலமாகமாக அழைத்துச்சென்றார்கள். இவர்கள்மண்டபத்திற்கு வருமுன்பே மண்டபத்தில் சுமார் 1000-பேர்வரை ஆண்களும் பெண்களும் நிறைந்து விட்டார்கள். அவர்களில் முன்னணியில் இருந்தவர்கள் தோழர்கள்,

ராவ்சாகிப் ராஜமாணிக்கம் பிரசிடெண்டு தாலுகா போர்டு, எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல். வைஸ் பிரசிடெண்டு, அண்டு முனிசிபல் கௌன்சிலர், கே ஆர். வி. அர்த்தனாரி செட்டியார், கே. ரகுநாதசெட்டியார் கௌன்சிலர், வி. பழனிச்சாமி செட்டியார் கௌன்சிலர், ஏ. கே. சந்திரய்யா கௌன்சிலர், ஆர். நரசிம்ம செட்டியார் கௌன்சிலர், கே. ஆர். பாலசாமி செட்டியார் பி. ஏ. பி எல். கௌன்சிலர், என். ஆர் சம்மந்தம் முனிசிபல்ரெவினியூ ஆபீசர், ஓமலூர் கதிரி செட்டியார், நாகை மணி, எத்தாப்பூர் ஒய். எஸ். அருணாசலம், காதர் பாஷா, வி. கே. ஒப்புளா செட்டியார், கே. பி. எஸ். ஏ. வேணுகோபால் செட்டியார், எஸ். ஏ. அப்பாவு செட்டியார், பாப்பண்ண செட்டியார், ஆர். கந்தசாமி, ராமசாமி, நடேசம், ரங்கசாமி, ராமச்சந்திர நாயுடு, ஜலகண்டாபுரம், ஏ. பி. அர்த்தனாரி, திருச்செங்கோடு, எஸ். கே. வரதராஜலு, என். பழனிச்சாமி, ஆர் பாலசாமி அய்யா. ராசிபுரம் காவேரி, சுப்பராயஆசாரி, துரைசாமி, பி. எஸ். திருமலப்பா, வி.எல். ஒ. கிருஷ்ணசாமி செட்டி, கே. ஜகதீசன், கே. எஸ். அருணாசலம், பி. எல். திருமலையர், தோ. அ. சித்தையன், ஆர். எஸ். அருணாசலம், முத்தியாலு, புதுக்கோட்டை சோவிந்தராஜுலு, அய்யாசாமி, குருமூர்த்தி, கே ஜி. ராமசாமி சிலோன், ரங்கசாமி, நடேசன், எஸ். கே. வரதராஜுலு, என். பழனிச்சாமி, மு. காவேரி, ஆர். பாலசாமி அய்யா, சுப்பராயஆச்சாரி, துரைசாமி முதலியோர்களாவார்கள். தோழர்கள் ஈ. வெ. ராமசாமியும், வல்லத்தரசும் ஆசனத்தமர்ந்தவுடன் சேலம் தாலுகா போர்டுபிரசிடெண்ட் தோழர் ராவ்சாகிப் பி. ராஜமாணிக்கம் அவர்களை வரவேற்பு விழாவுக்கு தலைமை வகிக்கும்படி தாலுகா போர்டு வைஸ் பிரசிடெண்டும், முனிசிபல் கௌன்சிலரும் பிரபல வக்கீலுமாகிய தோழர் எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல்., அவர்கள் பிரரேபிக்க வக்கீலும் கௌன்சிலருமான தோழர் பாலசாமி அய்யா பி. ஏ., பி. எல்., அவர்கள் ஆமோதிக்க தோழர் ராஜமாணிக்கம் அவர்கள் தலைமை வகித்ததும், தோழர்கள் சிலர் சுயமரியாதை கீதம் பாடினார்கள்.

பின்பு தோழர்கள் ராமசாமி, வல்லத்தரசு ஆகியவர்களைப்பற்றி தலைவர் புகழ்ந்து சில வார்த்தைகள் சொல்லி இருவருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்புப்பத்திரங்களைவாசிக்கும்படி சங்கக்காரியதரிசி தோழர். அ. சித்தையன் அவர்களை கேட்டுக்கொண்டார். இருவருக்கும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. பிறகு தோழர் வல்லத்தரசு அவர்கள் வரவேற்புக்கு பதிலளிக்கும் முறையில் அரைமணி நேரம் பேசினார். அதில் புதுக்கோட்டை நிலைமையையும், அங்குநடந்த கலவரத்தைப்பற்றியும் அங்கு வெகுகாலமாய் நடந்துவரும் பார்ப்பன ஆதிக்கக் கொடுமைகளைப்பற்றியும் கேட்போர் மனம் துடிக்கும்படியாக எடுத்துச்சொன்னார். பிறகு தோழர் ராமசாமியும் ஒரு மணி நேரம் மேல்நாட்டுச்சுற்றுப்பிரயாணத்தைப்பற்றியும் இனிச் செய்யவேண்டிய வேலையைப்பற்றியும் விளக்கிச்சொன்னார். பிறகு தோழர் அய்யாசாமி எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைவருக்கும் வந்திருந்தவர்களுக்கும் வந்தனம் சொல்ல, கூட்டம் 12-மணி சுமாருக்கு முடிவடைந்தது. பிறகு பகல் சாப்பாடு தோழர் அருணாசலம் அவர்கள் வீட்டில் நடந்தது. அந்த விருந்துக்கு சுமார் 50-பேர்கள் வரை அழைக்கப்பட்டிருந்தார்கள்.

### மாலை பொதுக்கூட்டம்.

மாலை 5-மணிக்கு சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கு சேலம், செவ்வாய்ப்பேட்டை, அம்மாபேட்டை, மற்றும் ராசிபுரம், திருச்செங்கோடு, நாமக்கல், ஓமலூர், ஜலகண்டாபுரம், ஆத்தூர், எத்தப்பூர், அரிசிபாளையம் குகை முதலிய இடங்களிலிருந்தும் சுமார் 2000-பேர்களுக்கு மேலாகவே ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். தோழர் வரதராசலு அவர்கள் சுயமரியாதை கீதம் பாடினார். கூட்டத்திற்கு தோழர் எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ., பி. எல்., அவர்களை தலைமை வகிக்க தோழர் சித்தையன் பிரரேபிக்க தோழர் நடேசன் ஆதரிக்க தோழர் அய்யாசாமி அவர்கள் தலைமை வகித்து தோழர்கள் ராமசாமியையும், வல்லத்தரசு அவர்களையும்பற்றி சில வார்த்தைகள் சொன்னார். முதலில் தோழர் வல்லத்தரசுஅவர்கள் 1-மணி நேரம் பேசினார். பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பேசினார் (பிரசங்கசாரம் மற்றொருபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

பிறகு தலைவர் முடிவுரை கூறியவுடன் கூட்டம் 9-மணிக்கு முடிந்தது. அன்று இரவு தோழர் எஸ். ஏ. அய்யாசாமி அவர்கள் வீட்டில் விருந்து நடந்ததும் அன்று இரவே தோழர் வல்லத்தரசு அவர்கள் சென்னைக்குச் சென்றுவிட்டார்.

மறுநாள் காலையில் தோழர் ஈ. வெ. ராமசாமி, தோழர் நாகபட்டணம் மணி, எல்லநாயகம், திருச்செங்கோடு ரங்கசாமி ஆகியவர்கள் சேலத்திற்கு அடுத்ததாதம்பட்டிஎன்கின்ற கிராமத்திற்கு சென்று வந்தார்கள். பிறகு பகல் 11-மணிக்கு சென்னையிலிருந்து தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் வந்து சேர்ந்தார் பகல் சாப்பாடும் ஒரு பெரும் விருந்தாகவே தோழர் அருணாசலம் அவர்கள் வீட்டில் 40, 50 பேருக்கு நடந்தது. சாப்பாட்டுக்கு பிறகு தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, அழகிரிசாமி, ரங்கசாமி, நடேசன், முத்தியாலு, வரதராஜுலு முதலிய சுமார் 20-பேர்களுக்கு மேலாகவே ராசிபுரத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கு மாலை 6-மணிக்கு சேணியர்தெருவு மைதானத்தில் பேளுக்குறிச்சி மிட்டாதார் தோழர் சுப்பராயகவுண்டர் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. தோழர்கள் மல்லிகார்ச்சுனன், வரதராஜலு,இவர்கள் சுயமரியாதைக்கீதம் பாடியவுடன் முதலில் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் பேசினார். பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பேசினார். தலைவர் முடிவுரைகூற மீட்டிங்கு இனிது முடிந்தது. அன்று இரவு தோழர் காவேரி அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் ஒரு பலமான விருந்து நடந்தது. அன்று இரவே எல்லோரும் சேலத்துக்கு புறப்பட்டுவிட்டார்கள். மறுநாள் காலையில் தோழர் ஈ. வெ. ராமசாமியும், நாகை மணியும் ஈரோட்டுக்கு பிரயாணமானார்கள் தோழர். அழகிரிசாமி அவர்கள் மற்றும் இரண்டு நாள் தொடர்ந்து இரண்டு மீட்டிங்கு நடத்திவிட்டு சென்னைக்கு சென்றுவிட்டார்.

தோழர் ஈ. வெ. ராமசாமி சேலம் வரவேற்பில் பேசியதாவது:-

தலைவரவர்களே! தோழர்களே!!

தலைவரவர்கள் என்னைப்பற்றி புகழ்ந்து பேசியதில் நான் மேல் நாட்டிற்குச்சென்றதில் ஏதோ பல அரிய விஷயங்களை அறிந்துகொண்டு வந்திருப்பதாககூறி நான்ஏதோபல அரிய விஷயங்களை சாதித்து இருப்பதாகவும் கூறினர். நான் எனது மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தில் ஒன்றும் புதிதாக கற்றுக்கொண்டு வரவில்லை. என்னுடைய அபிப்பிராயங்களும், எண்ணங்களும், ஆசைகளும் எனது மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தால் பலப்பட்டன. அசைக்க முடியாத அளவு உறுதி கொண்டு விட்டன. மற்றும் எனது ஆசை வெறும் கனவு ஆசை அல்லவென்றும், எனது அபிப்பிராயம் நடைமுறையில் சாத்தியமில்லாத ஆகாயக்கோட்டை அபிப்பிராயம் அல்ல என்றும், நான் எதையும் அமிதமாக எண்ணி மனப்பால் குடிக்கவில்லை என்றும் உணர்ந்தேன். அதற்கு ஆதாரமாக அநேக விஷயங்களை பிரத்தியக்ஷத்தில் பார்த்து எனது கொள்கையும் ஆசையும் சாத்தியமே என்றும், சர்வ சாதாரணமே என்றும் அறிந்தேன். இதுதான் எனது மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணச்சேதியென்றும், சுற்றுப்பிரயாண அநுபவமென்றும் ஒரு வார்த்தையில் சொல்லி முடிக்கின்றேன். மற்றும், தோழர் முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் பேசிய போது பார்ப்பனக் கொடுமையையும், [illegible] பேசியதுடன் பார்ப்பனீயத்தைப் பூண்டோடு ஒழிக்கவேண்டுமென்றுசொன்னார். அதைப்பற்றி எனது அபிப்பிராயம் என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆனால், பார்ப்பனீயப் பூண்டை அழிப்பதால் பார்ப்பனீயம் ஒழிந்து விடும் என்று நான் கருதவில்லை. ஏனெனில் பார்ப்[illegible]பதில்லை. அதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். அதாவது,

இந்த மண்டபம் நிறைய கொசுவென்று கொசுக்கள் இருந்து உங்களை உபத்திரவம் செய்வதாய் வைத்துக் கொள்ளுங்கள். அந்த கொசுக்கள் உங்களுடைய ரத்தத்தை உருஞ்சுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு நீங்கள்

களை செய்ய வேண்டும் கொசுக்களைப் பிடித்துப் பிடித்து நசுக்கி விட்டால் போதுமா? இந்த மண்டபத்தை சுத்தம் செய்து வெள்ளையடித்து புகைபோட்டு இம்மண்டபத்துக்குள் இருக்கும் கொசுக்களைக் கொன்று விட்டால் போதுமா? நன்றாய் யோசித்துப்பாருங்கள். இதனால் எல்லாம் கொசு உபத்திரவம் தீர்ந்து விடாது; முதல் நாள் கொன்ற கொசுக்களுக்குப் பதிலாக மறுநாள் புதிய கொசுக்கள் வந்து புகுந்து விடும்.

மற்றும் ஒரு இடத்தில் ஒரு வியாதி ஏற்பட்டால் வியாதி வந்தவனுக்கு பார்த்துப் பார்த்து மருந்து கொடுத்து கொண்டு வருவதால் வியாதியை ஒழித்துவிட முடியாது. வியாதியின் மூலாதாரத்தைக் கண்டு பிடித்து அதை அடியோடு அழிக்கவேண்டும். அதுபோலவே கொசுக்கள் இந்த மண்டபத்திற்குள் வருவதற்கு காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்து அதை அழிக்கவேண்டும். இந்த மண்டபத்தில் இவ்வளவு அதிகமான கொசுக்கள் கொசகொசவென்று இருக்கின்றதென்றால் இதற்குக்காரணம் இங்குள்ள ஓதம், அருகிலுள்ள நீர்த்தேக்கம் அதிலுள்ள அசுத்தம் அழுக்கு ஆகிய காரணங்களால் தான் கொசுக்கள் உண்டாகின்றன என்பதை நன்றாய் அறியவேண்டும். கொசு உபத்திரவம் கூடாதென்கின்றவர்கள் மேற்கண்ட அசிங்கங்களையும், நீர்த்தேக்கங்களையும் ஒழிக்கவேண்டும். அக்கம் பக்கம் உள்ள எல்லா இடமும் சுத்தமாக வைக்கப்படவேண்டும், அப்பொழுது தான் கொசுக்கள் ஒழியும் இல்லாவிட்டால் "வெட்ட வெட்டத் தழையும்" என்பது போல எவ்வளவு அழித்தாலும் வட்டியுடன் பெருகும் என்பதே எனதபிப்பிராயம்.

ஆகையால் அதுபோலவே பார்ப்பனர்கள் எப்படி உண்டானார்கள், அவர்கள் தொல்லை எதனால் ஏற்பட்டது, அதை எது பாதுகாத்துவளர்க்கின்றது? என்பவைகளைக் கண்டு பிடித்து அவற்றை அழியுங்கள். நசுக்குங்கள். அதுதான் பார்ப்பனியத்தை ஒழிக்கும் மார்க்கமாகும். இல்லாதவரையில் நமது பாடெல்லாம் வீணாகிவிடும். அன்றியும் மற்றவர்களால்வீண் கூச்சலும், குரோதமும், துவேஷமும் என்று தான் சொல்லப்பட்டுவிடும்.

ஆகையால் நாம் இவ்விஷயங்களில் முன்னைய அபிப்பிராயங்களை சிறிதும் மாற்றிக்கொள்ளாமல் மூல காரணங்களைக் கண்டு அதை அழிக்கும் வேலையில் ஈடுபடவேண்டும் என்று சொல்லுகின்றேன்.

அதுஎன்னவென்றால்? பார்ப்பான் என்பது மேல் ஜாதிக்காரன் என்கின்ற தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது. மேல ஜாதிக்காரன் என்பது பாடுபடாமல் சோம்பேறியாயிருந்து ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பது என்கின்ற தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது இதை நன்றாய் உணர்ந்து இந்த தத்துவ அடிப்படையை இடித்தெறிய முயன்றோமானால் பார்ப்பனர்கள் என்கின்ற வார்த்தையே நாட்டில் இல்லாமல் போய்விடும். பார்ப்பனர் மாத்திரமல்ல; ஒரு ஜாதிக்கு; மற்றொரு ஜாதி மேல் என்கின்ற தத்துவமே அழிந்து விடும். அதுமாத்திரமல்ல ஜாதி முறையே அடியோடு அழிந்து விடும்.

சாதாரணமாக இன்று பார்ப்பன ஜாதியை மாத்திரம் ஒழித்து விட்டால் போதுமா? என்று பாருங்கள். இந்த நாட்டில் பார்ப்பனர்கள் கூடாதென்று சொல்லுகின்றபோது அதற்கு அடுத்த ஜாதியாய் விளங்கும் சைவர்கள் முதலியவர்களுக்கு இருக்க இடமுண்டா? என்று யோசித்துப்பாருங்கள். சைவன் என்றால் என்ன? பார்ப்பானைப்போலவே சரீரத்தால் வேலை செய்யாத சோம்பேறி என்றுதானே அர்த்தம். எவனொருவன் தன்னை மேல்ஜாதிக்காரன் என்று சொல்லிக்கொள்ளுகிறானோ அவனெல்லாம் சரீரத்தில் வேலை செய்யாமல் மற்றவர்கள் உழைப்பில் வாழுகின்றவன்--வாழ ஆசைப்படுகின்றவன் என்றுதானே அர்த்தம்.

ஆகவே ஜாதியை ஒழித்தாக வேண்டும், என்றும் எல்லோரும் சரீரத்தால் பாடுபட்டாகவேண்டும் என்றும் நிபந்தனை ஏற்படுத்தியாகவேண்டும். பாடுபடாதவனுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்று ஆக்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் பார்ப்பானும் ஒழிவான், பார்ப்பானால் ஏற்படுகின்ற கொடுமை என்பதும் வேறு எந்த வகையிலும் இந்த நாட்டில் இல்லாமல் ஒழியும்.

மேல்நாடுகளில் கூட பல இடங்களில் இந்தக்கொடுமை அதாவது சோம்பேறிகளின் சூழ்ச்சியும் கொடுமைகளும் இருந்துதான் வருகின்றன. அதற்காகத்தான் இன்று அநேக பாகங்களில் சோம்பேறி பாட்டாளி சண்டைகளும் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வையுங்கள். அதென்னவென்றால் இந்த சோம்பேறி ஜாதிகளுக்கோ வகுப்புகளுக்கோ ஆதரவும்ஆக்கமும் அளித்துக்காப்பாற்றி வர மற்றொரு கூட்டம் இருக்கின்றது. அதுவும் ஒழிந்தாகவேண்டும் என்பதை கருத்தில் இருத்தினால் தான் இந்த ஏமாற்றமும் கொடுமையும் ஒழிந்து படும். அதென்னவெனில் அது தான் பணக்கார வகுப்பு, முதலாளி வகுப்பு, மிராசுதார் வகுப்பு என்பனவாதியவைகளாகும். இந்த வகுப்புகளால்தான் பார்ப்பனீயம் அதாவது சோம்பேறித்தத்துவம் இருந்துவருகின்றது. அதையும் மாற்றியோ அழித்தோதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் சுலபத்தில் பார்ப்பனீயம் ஒழிந்து விடாது என்று பேசி விட்டு மற்றவைகளை இன்றைய மாலை பொதுக்கூட்டத்தில் பேசுவதாகச் சொன்னார்.

### பொதுக்கூட்டம்.

சேலம் விக்டோரியாமார்கெட்மைதானத்தில் பொதுக்கூட்டம் கூடியது.

### தோழர் எஸ். ஏ. அய்யாசாமி தலைவர்.

கூட்டத்திற்கு சுமார் 2000 பேர்கள் வரை வந்திருந்தார்கள். பிரபல வியாபாரிகளும் வக்கீல்களும் சில அதிகாரிகளும் குகை, அம்மாப்பேட்டை, செவ்வாய்ப்பேட்டை, அரிசிபாளையம் முதலிய பாகங்களிலிருந்து நெசவு தொழிலாளிகளும் மற்றும் இந்து, மகமதியர், ஆதிதிராவிடர், மாணவர் ஆகிய அநேகர் வந்திருந்தார்கள்.

கூட்டத்தில் சுயமரியாதைப் பாட்டு பாடியவுடன் தோழர் எஸ். ஏ. அய்யாசாமி அவர்கள் தலைமை வகித்ததும் தோழர் முத்துசாமிவல்லத்தரசு அவர்கள் பேசினார்.

### எம். வல்லத்தரசு

அவர்கள் பேசியதின் சாரமாவது:- பல மதங்களாலும் பல ஜாதிகளாலும் பல விதப்பட்ட லட்சியங்களாலும் இந்திய நாடு தலைவிரி கோலமாய் அல்லல்படுகின்றதென்றும், நாட்டையும் மக்கள் சமூகத்தையும் ஒன்று படுத்தாமலும் மக்களின் லட்சியத்தை ஒரு வழியில் திருப்பாமலும் எவ்வளவுதான் பாடுபட்டாலும் எவ்வளவுதான் கஷ்டமும் தண்டனையும் அடைந்தாலும் பயனடைய முடியாதென்றும், இந்தியாவைப் போல் மதங்களாலும், ஜாதிகளாலும் வகுப்புகளாலும் பிரிந்துள்ள தேசம் எதுவும் இன்று சுதந்திரமோ சுயராஜ்யமோ பெற்றதில்லை என்றும், ஒரு நாளும் பெற முடியாதென்றும் பல உதாரணங்களால் எடுத்துக்கூறி எப்படியாவது ஒரு மதமாகவும் ஒரு லட்சியமாகவும் ஆவதற்கு முயற்சிக்கவேண்டியதே இன்று இந்திய மக்கள் கடமை என்றும், அதுவே அவர்கள் முன்னணி வேலையென்றும் பேசினார்.

### ஈ. வெ. இராமசாமி.

பிறகு தோழர் ஈ. வெ. இராமசாமி பேசினார். (தோழர் ஈ. வெ. இராமசாமியின் சேலம் உபன்யாசமும், ராசீபுரம் உபன்யாசமும் ஒன்றாகச் சேர்த்து அதன் கருத்தை சுருக்கி உபன்யாசமாக எழுதப்பட்டிருக்கிறது.)

தோழர்களே! சுயமரியாதைஇயக்கம் என்பதுபற்றி பேசுவேன் என்று துண்டுப்பிரசுரங்களில் காணப்பட்டிருக்கின்றன. சுயமரியாதை இயக்கம் என்ன? என்பதுபற்றி பொது ஜனங்களுக்கு ஒரு விதத்தில் சுயமரியாதை இயக்கத்தார்களைவிட அதன் எதிரிகளே அதிகமாகப் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

அதாவது, சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கம் என்றும் அது கடவுள், மதம், காங்கிரஸ், அரசன் ஆகியவைகளுக்குத் துரோகமான இயக்கமென்றும், காங்கிரசுக்காரர்களும், இந்து, இஸ்லாம், கிறிஸ்துமதக்காரர்களும் அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்தும் அரசாங்க மந்திரிகளுக்கும், சட்ட மெம்பர், மதம் காப்பாற்றும் போலீசு மெம்பருக்கும் தூது நடந்த வண்ணமாயும் விண்ணப்பங்கள் அனுப்பிய வண்ணமாயும் இருக்கின்றார்கள். போதாக்குறைக்குவெள்ளைப்பத்திரிகையாகிய "மெயில்" பத்திரிகையும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அரசாங்கத்திற்கும், காங்கிரசுக்கும், காந்திக்கும் எச்சரிக்கை செய்து சுயமரியாதை இயக்கத்தை அழிக்கச் சொல்லி சூசனை காட்டுகின்றது. அரசாங்கமும்தன் பங்கைச் செலுத்துகின்றஅளவிற்கென்றுசுயமரியாதைக்காரர்கள் பின்னால் C. I. D. களைவிரட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

ஆகவே சுயமரியாதை இயக்கத்தைப்பற்றித் தெரியவேண்டுமானால் அவ்வியக்கத்தின் விரோதிகள் யார் என்பதைத் தெரிந்தாலே விளங்கிவிடும். இவ்வியக்கம் தோன்றிய காலம் முதல் எவ்வளவோ தொல்லைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் ஆளாகவேண்டியிருந்தது என்பதையும் பார்த்தாலும் விளங்கிவிடும்.

ஆகவே இவ்வியக்கத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள இனி என்ன சொல்லவேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை. மற்றபடி இவ்வியக்கக்கொள்கைகள் சரியா தப்பா என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டியது அவசியமென்றே கருதுகிறேன்.

தோழர்களே!

இந்தப்படிக்கு ஒரு இயக்கம் அதாவது இத்தனை பக்களுக்கு அதிருப்தி ஏற்படும்படி ஒரு இயக்கம் எதற்காக நடத்தப்படவேண்டும்? என்பதை யோசித்துப்பாருங்கள். ஒரு மனிதனுக்கு "நல்லபேர்" வாங்குவதற்கும் சோம்பேரியாய் இருந்து வாழுவதற்கும் சுலபமானதும், சுகமானதுமான பலவழிகள் இருக்கும்போது ஏன் இந்தக்கஷ்டமானதும்; பழியும் தொல்லையும் இருக்கக்கூடிய வேலையில் ஈடுபட்டிருக்கின்றோம் என்பதை யோசித்துப்பாருங்கள். எனது சொந்தத்திற்கு ஒரு கௌரவமும் பெருமையும் வேண்டுமானால் நான் சம்பாதித்துக்கொள்ள முடியும். ஆனால் அவைகளால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்படக்கூடும் என்பதை ஆலோசித்துப்பார்த்தாய் விட்டது. மதத்திற்கு நல்ல பிள்ளையாய் இருந்தேன், அரசாங்கத்திற்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன், காங்கிரசுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன், பார்ப்பனர்களுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்தேன், பார்ப்பனர்கள் அல்லாதவர்களுக்கும் நல்ல பிள்ளையாய்இருந்தேன். ஒவ்வொருவரும் தன்தன் சுயநலத்துக்கு அனுகூலமாய் இருந்தால் மாத்திரம் நம்மை

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# தொழிலாளர் இயக்கத்திலும் பிராமணர்கள் சூழ்ச்சியா?

(டி. வி. முருகேசம்)

தோழர்களே!

நமது இந்தியாவில் தொழிலாளரியக்கமானது முதன்முதல் தென்னாட்டில்தான் உண்டாயது. சிறப்பாக சென்னைமாகாணத்தில் திவான்பகதூர்கேசவப்பிள்ளை, தோழர்கள் பி. பி. வாடியா வி. கல்யாணசுந்திர முதலியார், எஸ்.நடேசமுதலியார் முதலிய பெரியார்களின் பெரும் முயற்சியால் 18 வருடத்திற்கு முன் சென்னை பங்கிங்காம்மில், கர்னடிக்மில், சூளைமில்களின் தொழிலாளரைக்கொண்டு தோற்றுவிக்கப்பட்டது இதுபோது இந்தியாவெங்கும் பரவி இருக்கின்றது, அன்பர்களே! மேல்சொல்லிய நான்கு பெரியார்களின் தியாகத்தினுலும், தொழிலாளர்கள் முயற்சியாலுமுண்டாகியவிருக்ஷமானது செழிப்பாக வளர்ந்து பூத்துகாய்த்து பழுத்திருப்பதைக்கண்ட பிராமணர்கள் கூட்டம் பொறுமைகொண்டு தொழிலாளரியக்கத்தையே அடியோடழிக்க முயற்சி நடைபெற்று வருகின்றதை கவனியுங்கள். எந்த வகையிலும் முன்னேற்றமடைய வழியில்ல மல் தவித்துக்கொண்டிருக்கும் ஏழைதொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தி அதன் மூலமாக முதலாளிகள் இடமும், அரசாங்கத்தினிடமும் போதிய சௌகரியம் சட்டபூர்வமாகவாவது பெறட்டுமென்று தொழிற்சங்கங்களை பிராமணர்கள் அல்லாதபெரியார்கள் ஆங்காங்குஉற்பத்திசெய்து பெரும் கிளர்ச்சிகள்நடைபெற்றதின்பயனுக ஏழைத்தொழிலாளர்களுக்கெனஅரசியலில் ஆறு ஸ்தானங்கள் வரப்போகும் சீர்திருத்தத்தின்போது கொடுப்பதாக தெரிகின்றது. ஏழைத்தொழிலாளர்களும் சட்டசபை மூலமாக ஏதாகிலும் சில நன்மைகள் வருமென்று எதிர்பார்த்திருந்தனர். எல்லாவகையிலும் நம்பிராமணரல்லாத சமூகத்தை ஏமாற்றி வயறுவளர்க்கும் பிராமணக்கூட்டங்கள் தொழிலாளரியக்கத்தை அடியோடு அழிக்க புற்றீசல்போல் புறப்பட்டு சில மாதங்களாக தொழிலாளர் சங்கங்களில் புகுந்து பொருளை ஏராளமாக வாரியிறைத்து இரண்டு கக்ஷியாக செய்து எல்லாத்தொழிலாளர் சங்கங்களுக்கும் பிராமணர்களே தலைவர்ராக வந்து கொண்டிருக்கின்றனர். சகோதரர்களே! உதாரணமாக எத்தனை தொழிலாளர் சங்கங்களைக் கைப்பற்றி இருக்கின்றார்கள் என்பதை சொல்லுகிறேன். பாரபக்ஷமில்லாமல் சற்று சீர்தூக்கி பகுத்தறிவைக்கொண்டு நீங்களே கவனியுங்கள்.

(1) சென்னை செருப்புத்தொழிலாளர் சங்கத்தில் மங்களூர் பிராமணர் பி. சிவராவ், தலைவராக வந்து சேர்ந்திருக்கின்றார்.

(2) எம். எஸ். எம். ரயில்வே தொழிலாளர் சங்கத்தில் ஆந்திர பிராமணர் தோழர் கிரியின் கோஷ்டிபூராவும் சேர்ந்துவிட்டது.

(3) சென்னை டிராம்வேதொழிலாளர் சங்கத்தில் பிளவு உண்டாக்கி தமிழ் பிராமணர் தோழர் என். எஸ். சீனிவாசய்யர் தலைவராக வந்து விட்டார்.

(4) சென்னை அலுமீனியம் தொழிலாளர்சங்கத்தில் பிராமண தோழர் வி. ஆர். எஸ். மணி அய்யர் தலைவராக வந்து விட்டார்.

(5) சென்னை அரசாங்க அச்சுக்கூடத்தொழிலாளர்சங்கத்தில்மைலாப்பூர்பிராமணர் தோழர்கே. பாஷியம் ஐயங்கார் தலைவராக வந்துவிட்டார்

இன்னும் சென்னை மராமத்து தொழிலாளர் சங்கத்துக்கும், பெங்களூர் செருப்பு தொழிலாளர் சங்கத்துக்கும் பிராமணர்களே தலைவராக வந்து விட்டார்கள். மீண்டும் சென்னை ரிக்குச்சி தொழிலாளர் சங்கத்திலும், சென்னை மண்ணெண்ணைத் தொழிலாளர் சங்கத்திலும், சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத்திலும் பிராமணர்களே தலைவராக வரவேண்டும் என்று பல பல சூழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றது.

தோழர்களே! பிராமண ரல்லாதவர்கள் நமது தொழிலாளர் சங்கங்களுக்கு தலைவராக இருந்த போதல்லவா பெரும் நன்மையெல்லாம் நமக்கு ஏற்பட்டது. இடையில் தொன்றிய பிராமணர்கள் தலைவராக வந்து இது வரைக்கும் ஏற்பட்ட நன்மைகள் என்னென்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

தோழர்களேஎழுமின்! விழிமின்!! சத்திய மறிமின்!! பிராமணர்களின் ஏவலினல் சிலர், யாரிருந்தால் என்னவென்று நொண்டி சமாதானம்சொல்லவருகின்றனர். இந்த பிராமண அடிமைகளுக்கு பகுத்தறிவென்பது சிறியதளவு கூட இல்லை யென்பதும் தெற்றென விளங்கவில்லையா? அதாவது யாரிருந்தால் என்ன என்றால் பிராமணரல்லாத வர்கள்தான் இருக்கட்டுமே. பிராமணர்கள் என் வலிய வந்து பலசூழ்சிகள் செய்ய வேண்டும் என்பதை சற்று யோசிக்கநேரமில்லை போலும் இவர்களுக்கு. அன்பர்களே! ஆதிமுதல் இது வரையில் பல வழியில் நம்மை ஏமாற்றி வயறு வளர்த்தபிராமணர்களின் வார்த்தையை இனியாகிலும் சற்று யோசித்து நடந்து கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன்.

---

புரட்சி பொங்குக! பொதுஉடைமை ஓங்குக!!

# தோழர், ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு, சேலம் சுயமரியாதைச் சங்கத்தார், வாசித்துக் கொடுத்த வரவேற்புத்தாள்.

—:0:—

அன்புசால் அண்ணலே!

வருக! வருக!! நுமது வரவு நல்வரவாகுக!!!

உலகம் பொது, உலக இன்பம் யாவருக்கும் உரித்தானது என்னும் இயற்கை நியதிக்குச் சற்றும் பொருந்தா "உள்ளவன்" "இல்லாதவன்" என்னும் பேதத்தை பாரிலே புகுத்தி பஞ்சைகள் அல்லும் பகலுமுழைத்து உழைத்து உயிர்விடும் எமது ஏழைத் தொழிலாளர்கள் உண்டியும், உடையும், உறைவிடமும் இன்றி பரிதவிக்கவும் அவர் தம் உழைப்பினை எல்லாம் ஒருங்கே கொள்ளை கொண்டு, யாம் பணக்காரர், என்று இறுமாப்படைந்துள ஒரு சில சோம்பர் கூட்டத்தை,

தகர்த்தெறி வீர, வருக! வருக!!

"பணம் படைத்துள்ளோம் பரமனருளால்" உழைத்து உழைத்துச் சாகவே "ஏழையர் பிறந்தனர் எம்பிரானருளால்" என்றெண்ணி இறுமாந்திருக்கும் வஞ்சகக் கூட்டத்தினர், சாதி, மதம், சமயம், புராணம், கடவுளாதிய கட்டுப்பாடுகளை தமது சுயநலத்துக் காரணமைத்து உலகை வஞ்சித்துக் கொடுமைப்படுத்துவதை பார்த்துச்சகியாது, முதுமை நிறைந்த அயர்சிக் குரிய இப்பருவத்தில், இருப்பதும், இறப்பதும் ஏழையர் பொருட்டே என,

தன் மதிப்பியக்கங்கண்ட தகைசால் வீர, வருக! வருக!!

பாடுபடுபவன் பலனநுபவிக்க முடியாமையும் அநுபவிப்பவன் பாடுபடாமையுமாக இருக்கச் செய்யும் இன்றைய சமூக, அரசியற் சட்டங்களை மாற்றப் புரட்சி யொன்றே போதிய பலனளிக்கு மென்று எம்மிடை,

புரட்சியைப் புகுத்திய பொது உடைமை வீர!

இந்நாட்டிடை—அல்ல—இவ்வுலகிடை தனி உடைமை நீக்கி பொது உடைமையாக்கப் போர் செய்யும் நும் புரட்சியில் வாலிபர்களாகிய நாங்கள் என்றும் உழைத்து, வேண்டுங்கால் உயிரையும் கொடுக்க உளங்களித்துளோ மென்பதை தங்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"புற்றில் வாழ் அரவுக்கஞ்சோம், பொய்யர் தம் புரட்டுக்கஞ்சோம்,
வெற்றொழில் வேந்தர்க்கஞ்சோம், வெஞ்சிறை வாழ்வுக்கஞ்சோம்,
கொற்றொழில் பீரங்கிக்கும், கொடும் பணத்திமிர்க்கு மஞ்சோம்,
பற்றில்லா ஏழை கண்ணீர் பார்க்க நாம் அஞ்சுவோமே."

19—2—33 சேலம் சுயமரியாதை சங்கத்தார்.

---

## காஞ்சீபுரத்தில் சுயமரியாதைக்கூட்டம்.

20-2-33ல்மாலை 6-30மணிக்கு காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ஜவுளிக்கடை சத்திரத்தில் பெருந்திரளான கூட்டத்தினிடையேதக்கோலம்தோழர் ஏ. ஆர். செல்லப்பன்அவர்கள்தலைமையில் மாயவரம் தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் "காந்தியும் கதரும்" என்ற விஷயத்தைப்பற்றி நீண்ட நேரம் பேசினர். பின் காஞ்சி நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் பண்டிதமாளவியாவின் நயவஞ்சக வருணச்சிரம தர்மத்தைக் கண்டித்து பேசி முடித்தார். பிறகு தலைவர்முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது.

### மற்றொரு கூட்டம்,

21-2-33 மாலை 6மணிக்கு சங்குசாப்பேட்டை மைதானத்தில் பெருந்திரளான கூட்டத்தினிடையே மாயவரம் தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் தலைமையில் பூவாளுர், தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் "சுயமரியாதையும் சுகாதாரமும் மூடப்பழக்க வழக்கங்களும்" என்பதுபற்றியும் நாகப்பட்டினம் தோழர் என். பி. காளியப்பன் அவர்கள் சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டதன் அவசியத்தையும், அது மக்களுக்குச்செய்துவரும் நன்மையையும் விபரமாகப்பேசினர். பின் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள், தோழர் காந்தியினுடைய வர்ணச்சிரமத்தையும், சுயராஜ்யபித்தலாட்டத்தையும்பேசினர். கடைசியாக தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 9-30மணிக்கு முடிவுற்றது.

### மூன்றும் நாள் கூட்டம்.

29-2-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நடை பெற்றது. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள் அது சமயம் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் "காந்தியின் வர்ணச்சிரமம்" "தேசிய பித்தலாட்டம்" "சமதர்மத்திட்டம்" என்பவைகளைப் பற்றி மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் பேசினர் கூட்டம் 9மணிக்கு இனிது முடிந்தது என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

# பலதிட்டு ஒரு முழுக்கு.

(சந்தேகப் பேர்வழியின் மனப்போக்கு.)

மகாமகத்துக்கு மக்களை வரும்படி எஸ். ஐ. ஆர். ரயில்வேகாரர் விளம்பரம் செய்கிறார்கள், துண்டு பிரசுரம் அனுப்பி இருக்கிறார்கள், அழைப்பும் அனுப்புகிறார்கள் ஆனால் பணம் கொடுத்தால் தான் டிக்கட் கொடுப்பார்களாம்.

உலகமானது பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு பிரளயத்தால் அழிக்கப்படுகிறது என்பதாக இந்து சாஸ்திரம் சொல்லப்படுகிறது. சிருஷ்டி செய்வதை அழிப்பானேன்? அழிப்பது யார்? அழிப்பதின் காரணமென்ன? பூமிதேவி பாரம் சுமக்கமுடியவில்லை என்பதாகவும் சொல்லப்படுகிறது. அத்துடன் மக்கள் பூமியில் வசிக்க இடம் போதாமல் இருக்கலாம் என்றும் சொல்லலாம். அப்படியானால் குறைந்த அளவே சிருஷ்டி செய்துகொள்ளப்படாதோ? பூமிதேவி பூமியை சுமக்கும்போது எந்த இடத்தில் இருக்கிறாள்? ஒரே கடவுள் மூன்று உருவமாக இருந்து கொண்டு சிருஷ்டி ஸ்திதிசம்மாரம் அதாவது படைத்தல், காத்தல், அழித்தல் என்று மூன்று வேலையும் அவரே செய்வதாகவும் சொல்லப்படுகிறதே அப்படியானால் சைவம், வைஷ்ணவம் முதலிய தகராறுகள் எதற்காக? கிறிஸ்து முகமதியர் முதலிய மதக்காரர்களை ஐரோப்பா துருக்கி முதலிய தேசங்களில் வேறு கடவுள் எதாவது சிருஷ்டிக்கிறாரா?

கும்பகோண "மகாமக" புராணத்தில் சொல்லியபடி சிருஷ்டி பீஜம் அழியாதிருக்கும்படி பிரம்மாவானவர் சிவனை வேண்டுவானேன்? மூன்று கடவுளும் ஒன்றுதானே அப்படியிருக்க ஒருகடவுள் ஒருகடவுளை வேண்டுவது எதற்கு? சிருஷ்டிக்காகவேண்டுமென்றால் வேறு வகையில் இவர்யோசனை சொல்லக்கூடாதா? சிருஷ்டி பீஜந்தான் அழியாததாயிற்றே அந்த சிருஷ்டி பீஜத்தை (சிவனே) எல்லாம் வல்ல இறைவனே தன்னிடத்தில் பத்திரப்படுத்திவைத்துக்கொள்ளக்கூடாதா? அதற்காக புண்ணிய க்ஷேத்திரங்களின் மண் எடுத்து அமுதம்விட்டு பிணைந்து அதை குடமாக (கும்பம்) மணைந்து அதனுள் அமுதத்தை நிறப்பி அதில் சிருஷ்டி பீஜத்தையும் (சிருஷ்டிவித்து) வேதம் முதலியவைகளை வைத்து அக்கும்பத்தை மகாமேருவின் சிகரத்தில் வைக்கச் சொல்லுவானேன்? பிரளயாக்கினியான நெருப்பும் சண்டமாருதம் என்னும் புயல்காற்றும் அதன் வேலையை நடத்தும்போது சட்டிக்குள் இருக்கும் வித்தும் வேதமும் என்னவாகும்? சாம்பல்காகும் போதாதற்கு சப்தமேகங்களும் சேர்ந்து வருஷித்து சாம்பலைக்கரைத்துவிடுகிறது. அப்போது மாவிலை, தர்ப்பை தேங்காய், பூணூல், வேதம், பீஜம் இவைகள் எப்படி வேகாமல் இருக்கும்? அது எப்படி ஒவ்வொரு இடங்களுக்குப்போய் தங்கி அவ்விடத்தில் க்ஷேத்திரங்களும், மூர்த்திகளும், (லிங்கமும்) உண்டாயிற்று? அந்தக் குடத்தை உடைக்க சிவபிரான் வேடஉருவெடுத்து அம்புகளால் அடிப்பானேன்? சும்மா எடுத்தால் வராதா? இல்லாவிட்டால் எல்லாம் உருகி கட்டியாய்விட்டதா? கட்டியாகி இருந்தால் அமுதம் ஓடி வழிந்த இடத்தில் "மகாமகக்" குளம் உண்டாயிருக்கிறதென்கிறார். அந்த இடம்தான் கும்பகோணமாம். குடத்தின் கழுத்து சிதறிவிழுந்த இடத்துக்கு "குடவாசல்" என்கிறார். அமுதம் வழிந்து ஓட அது நெருப்பினால் சுண்டிவிடவில்லையா? அதாவது ஆவியாய்ப்போய்விடவில்லையா? அல்லது பிரளய ஜலத்துடன் கலந்து விடவில்லையா? அப்படிக்கலந்திருந்தால் அந்த அமுதம் அநேக இடங்களில் கலந்திருக்கவேண்டுமே? குடத்தில் தங்கியிருந்த அமுதம் ஒரு பெரிய தடாகம் அதாவது பெரியகுளம் ஆயிற்றென்றால் அந்தக்குடம் எவ்வளவு பெரிதாக இருக்கலாம் அந்த நெருப்பில் வெந்த பீஜத்தைக்கொண்டே பிரம்மாவானவர் மறுபடியும் சிருஷ்டி எப்படி செய்தார்? வெந்த வித்து முளைக்காதே. சிவபிரான் கொஞ்சம் மண்ணையும், மணலையும் எடுத்து அமுதம் விட்டு பிசைந்து லிங்கம் ஒன்று செய்து அதை அந்த உடைந்த குடத்தின்மேல் வைத்து பூஜை செய்தாராம். அவர் செய்த பூஜை யாருக்கு? பிறகு மகாமக தினமாகிய அந்த நன்னாளில் அந்த லிங்கத்துடன் கலந்து மறைந்தாராம் அதுதான் கும்பேஸ்வரராம். ஆனால் இப்போது அந்த மண்ணும், மணலும் சேர்த்து உடைந்த குடத்தின்மேல் வைத்த ஆதிலிங்கம்தான் அவ்விடத்திலிருக்கிறதா? அல்லது வேறு புதுப்பித்து கல்லினால் செய்த வேறு லிங்கம் இருக்கிறதா? கங்கை முதலிய நதிகளாகிய நவகன்னியர்களிடத்தில் பாபம் செய்தவர்களெல்லாம் வந்து ஸ்நானம் செய்து அந்த பாவங்களையெல்லாம் அவர்களிடத்தில் ஒப்புவித்திருக்கிறபடியால் அந்தப்பாவங்களை தாங்கள் எப்படி போக்கிக்கொள்ளுவது என்று நதிகள் சிவபிரானை வேண்ட கும்பகோணமகாமக குளத்தில் நீராடினால் எல்லாப் பாவமும் துலைந்துவிடுமென்று சொல்லவும் அவர்கள் சிவபிரானை துணையாக வரும்படி அழைத்தார்களாம். குளத்தில் நீராடி பாவத்தைத் துலைத்துக் கொள்ளும் இந்த நதிகளுக்கு சிவபிரான் துணை எதற்கு? இவர்களுக்கு வழி தெரியாதா? விசாரித்தறியக் கூடாதா? அதன் பிறகு சிவபிரான் நதிப்பெண்களை காசிக்கு அழைத்துப் போய் அவ்விடத்தில் அவர்களுக்கு விஸ்வரூபதரிசனம் கொடுத்து அவர்களை கும்பகோணத்துக்கு அழைத்து வந்து மகாமகக் குளத்தில் நீராட வைத்து நதிகளின் பாவத்தைப் போக்கடித்தாராம் அந்த நதிகளுக்கு இவ்வளவு தொந்திரவு கொடுக்காமல் சர்வேஸ்வரனை அந்த "ஈசன்" அந்தப்பாவத்தையெல்லாம் அவரே போக்கடித்தால் போகாதா? இவ்வளவு செப்படி வித்தை செய்தவருக்கு இது தெரியாதா? ஆனால் இப்போது அந்தக்குளத்தில் முந்தின அமுதம் கலந்த ஜலம்தான் இருக்கிறதோ அல்லது இப்போது புதிதாக சேறு கலந்த ஜலம்தான் இருக்கிறதோ தெரியவில்லை. எல்லாப் பாவத்தையும் போக்கடிக்கக்கூடிய இந்தக் கும்பகோண மகாகுளம் உள்ளவரையில் பாவம் செய்தவர்களுக்குத்தான் என்ன பயம்? இனிமேல் செய்யப் போகிறவர்களுக்கு என்ன பயம்? பல திட்டு ஒரு முழுக்கு.

---

# தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு, அவர்களுக்கு வாசித்துக் கொடுத்த வரவேற்புத்தாள்.

---

## வாலிப தோழரே, வருக! வருக!!

### நும் வரவு நல்வரவாகுக!!!

எங்கள் வேண்டுகோட்கிணங்கி முதன் முறையாக ஈண்டு விஜயம் செய்யும் தங்களை வரவேற்கும் இவ்வரிய சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக நாங்கள் களிபேருவகை எய்துகிறோம்,

## இளஞ்சிங்கமே!

"எல்லாரும் ஓர் குலம் எனப்படல் வேண்டும்
எல்லாரும் பொதுவாய் இன்புறல் வேண்டும்
உயர்வு தாழ்வுகள் ஒழிந்திடல் வேண்டும்
பெண்கள் விடுதலை பெற்றிட வேண்டும்
கைமைக் கொடுமை களைந்திட வேண்டும்
காதல் மணமே காணுதல் வேண்டும்
மூடச் செயல்கள் முறிபடல் வேண்டும்
யார்க்கும் கல்வி ஈந்திடல் வேண்டும்
தொழிற்கல்வி எங்கும் தோன்றிடல் வேண்டும்."

என்னும் சுயமரியாதைக் கொள்கைகளை தென்னாடெங்கும் வீர உலை முழக்கி தன்னலம் விடுத்து பொது மக்களுக்குழைத்தலே தம் தலையாய கடனெனக் கொண்டு உழைத்து வரும் உத்தமரே நீவிர் மக்கட்காற்றும் பணியை பாராட்டுகின்றோம்.

## ஏழைகட்கென வாழும் அன்பரே!

புதுக்கோட்டை அரச குடும்பத்தில் தோன்றியும் ஏழை மக்கட்கென்றே உழைத்து அதன் பயனாய் அரசாங்கத்தின் கோபத்திற்காளாய் நாடுகடத்தப் பட்டனையாயினும், நும் மனத்தூய்மையைக் கண்டு அவ்வரசாங்கம் தம் குற்ற முணர்ந்து உம்மை திரும்ப அழைக்குமாயின் நினது கொள்கையின் சிறப்பை யாம் எடுத்தியம்புதல் சாலுமோ! நீவிர் மீண்டும் புதுக்கோட்டை சென்று சுயமரியாதைக் கோட்டையாக்குவீர்களென்பதில் யாம் எட்டுணையும் ஐயங் கொண்டோமல்லேம்.

19—2—33 சேலம் சுயமரியாதை சங்கத்தார்.

---

## வடஆற்காடு ஜில்லா 11வது கூட்டுறவு பெருங்கழகம், ஆரணி.

வடஆற்காடு ஜில்லா பதினொன்காவது கூட்டுறவு பெருங்கழகம் நாளது மார்ச்சு மாதம் 5, 6 தேதிகளில் ஆரணியில் சென்னை அரசாங்க மாஜி மந்திரி தோழர் எ. அரங்கனாத முதலியார் பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் தலைமையின்கீழ் நடைபெறும். சென்னை அரசாங்க மந்திரி கனம் பி. டி. ராஜன் பி. ஏ. அவர்கள் ஷை மகாநாட்டைத் திறந்து வைப்பார். கல்வி மந்திரியார் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் பி. ஏ. பி.எல். அவர்கள் கைத்தொழில் கண்காக்ஷியைத் திறந்து வைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள் ஒரு நிருபர்.

---

## சென்னை புரசவாக்கம்.

தோழர் டி. ஆர் கோவிந்து ராஜுலு அவர்களின் தாயார் காலமான இரண்டாவது வருட ஞாபகார்த்தமாக எவ்வித மூடசடங்குகளும் செய்யாமல் 21-2-33 செவ்வாய்கிழமை அநேக ஏழைகளுக்கு அன்னமளித்தார். ஒரு நிருபர்

# காஞ்சி காமகோடி சங்கராச்சாரி அவர்களுக்கு வணக்கம். மகாமகம் சத்தியமல்லவே?

[கைவல்யம்.]

தாங்கள் சென்னையை விட்டு மகா மகத்திற்காக யாத்திரை புறப்படுகையில் சென்னை மகாஜனங்களுக்கு ஆசி கூறி அனுப்பின உபதேச மொழிகளில் முதல் வாக்யம் சத்தியத்தைச் சொல் என்று நமது வேதம் உபதேசிக்கிறதென்பதாகும்.

சத்தியமென்பது அருமையான வாக்கியமென்பதில் சந்தேகமில்லை. எல்லாச்சமய வேதங்களிலும் சத்தியமென்பதே முதல் வாக்கியம். சத்தியத்தைச்சொல், சத்தியத்தைநடத்து, சத்தியத்தைச்செய் என்றே எல்லாச் சமய குருவும் உபதேசிக்கிறார்கள். அதில் யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணைகளுமில்லை.

ஒரு கடைக்குப்போய் இந்த சாமான்கள் என்ன விலை என்று கேட்டால் இதன் விலை 5-ரூபாய் இந்தக்கடையில் சத்தியமாக ஒரே விலைதான் என்கிறான். ஐயா கடைக்காரரே விலை அதிகமாகச் சொல்லுகிறீர்கள் 5-ரூபாய் இதன் விலை அதிகமேயாகுமென்றால், போகட்டும் உங்களுக்காக நாலே முக்கால் ரூபாய் போட்டுக்கொள்ளுங்கள் இங்கே அசத்தியம் சொல்லமாட்டோமென்கிறான். கடைக்காரரே மூன்றரை ரூபாய்க்குக் கொடுக்கிறீர்களா? என்றால் மூன்றரை ரூபாய்க்குக் கொடுத்தால் எங்களுக்குக்கட்டாது இங்கே பொய் சொல்லமாட்டோம் அவர்களுக்கும், இவர்களுக்கும் கொடுத்திருக்கிறோம் பட்டிகையைப் பாருங்கள். சத்தியமாக நேற்றுத்தான் பட்டிகை வந்தது. பொய் சொல்லமாட்டோம். பொய் சொல்லி எங்களுக்கு வரவேண்டியதொன்றுமில்லை என்பான். போகட்டும் சத்தியமாக நாலு ரூபாய் கொடுங்கள் என்கிறான். கொடுக்க முடியாது, கொடுத்தால் மூன்றரை ரூபாய்க்குக்கொடுங்கள் என்றால் உங்களுக்காகத் தான் சத்தியத்தைச் சொன்னோம். மற்ற கடைகளைப்போல் பொய்யும், புரட்டும் இங்கே கிடையாது சத்தியமான ஒரே பேச்சுத்தான். நீங்களும் வந்துவிட்டீர்கள் மூன்றே முக்கால் போட்டுக்கொள்ளுங்கள் என்பான். மூன்றரைக்குமேல் வேண்டவே வேண்டாம் என்றால்நாங்கள்சத்தியத்தைச்சொன்னாலும்ஒரேபிடிவாதமாகஇருக்கிறீர்கள் மூன்றரைக்குமேல் ஏதாவது சேர்த்துக்கொடுங்கள் என்பதோடு சத்தியமும், வியாபாரமும் முடியும். நமது கடைவீதிகளில் ஆளைப்பொருத்து, அவர்கள் அவசரத்தைப்பொருத்து, ஏமாளித்தனத்தைப் பொருத்து, எதார்த்த நம்பிக்கையைப்பொருத்து லாபம் சம்பாதிக்க சத்தியம் உபயோகப்படுவது போல நமது சமயத்திலும் தாங்கள் சொல்லும் சத்தியம் விளங்குகிறதே யல்லாமல், தங்களிடமாவது தங்கள் சமயத்திடமாவது வேதத்தில் சொல்லப்பட்ட சத்தியம் விளங்குகிறதா? இல்லை. இல்லை என்பதை பிரத்தியட்ச விபரத்தோடு உங்களுக்கும் உங்கள் சிஷ்ய கோடிகளுக்கும் எடுத்துக்காட்டவேஇதையெழுதுகிறேன். சிஷ்ய கோடிகளுக்கு உபதேசம் செய்யவேண்டிய பாத்தியதையை போலவே குருவைச் சிஷ்யர்கள் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்கிற விதி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றதென்பதைத் தாங்களறிவீர்கள்.

சிஷ்யர்களிடம் பொருள் சம்பாதித்து ஏழைகளான சாதுக்களுக்கு செலவு செய்யாமல் பொருளிருப்பு வைத்திருக்கும் கள்ளனைப்பூஜிக்கப்படாதென்று *பராசரஸ்மிருதியில் சொல்லப்பட்டிருப்பதையும் தாங்களறிவீர்கள். கள்ளன் என்கின்ற பதம் நம்முடையதல்ல. ஏட்டிலுள்ளதாகும்.

சத்தியத்தைச் சொல் என்றுநமது வேதம் சொல்லுகிறது. கிம்ஸத்தியம்? பூதஹிதம். ஸத்தியமென்றால் என்ன? பிராணிகளுக்கு க்ஷேமகரமானது ஸத்தியம், என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதே தங்கள் உபதேச மொழி. அதை அந்த வேத சத்தியப்பிரகாரம் நமது வேதமும், தங்கள் உபதேச மொழியும், தாங்களும் பிராணிகளின் க்ஷேமத்திற்கு என்ன செய்திருக்கிறது? பிராணிகளை யாகத்தில் கொன்று தேவேந்திரனுக்கும் மற்ற தேவர்களுக்கும் பூசைபோட்டு அதைத்தின்றால் அந்தப்பிராணிகள் மோக்ஷத்திற்குப் போகுமென்பதொன்று. எந்த விதத்திலேனும் தேடிய பொருளையும் அரும்பாடுபட்டுத் தேடின பொருளையும் பார்ப்பானுக்குத் தானமாகவும் தருமமாகவும் கொடுத்தால் புண்ணியம் வருமென்றும் உபதேசித்து உழைப்பில்லாமல் உலகத்தை ஏமாற்றிப் பார்ப்பான் பிழைக்கவும் குருவின் பாதகாணிக்கைகளென்று பல வழியாலும் தங்களைப்போன்ற குருவிற்குப் பணம் சேகரிக்கவும், பசியில்லாதவர்களுக்கு பரமான்னத்துடன் சோறு போடவும், அநேக ஜனங்களை ஒதுக்கி ஒன்றுக்கும் உதவாமல் நாட்டின் க்ஷேமத்தையும் சமூகத்தின் பலக்குறைவையும், அறியாமையும் உண்டு பண்ணிற்றேயல்லாமல் மற்றெந்த வகையில் பிராணிகளுக்கு இதம் செய்தது. இதம் மேல் உலகத்தில் போனால் தெரியுமென்பீர்கள். மேல் உலகத்தில் போய் தெரிந்து வந்தவர்களுமில்லை. நீங்கள் போய் தெரிந்து வந்து சொல்லப்போவதுமில்லை. நாங்களும் மேலுலகத்திற்குப் போய் மற்ற பிராணிகளுக்குச் சொல்லப்போவதுமில்லை. அந்த சத்தியம் அவ்வளவோடு நிற்கட்டும்.

தாங்கள் மகாமகத்திற்குப் போகிறீர்களே. அந்த மகாமகம் சத்தியமா? அதனால் பிராணிகளுக்குமோக்ஷமுண்டாகுமென்பதாவதுதான் சத்தியமா? என்பவைகளைக்கவனிப்போம்.

மகாமகமென்பது வேதத்தால் சொல்லப்பட்ட சத்தியமா? அல்ல. ஒரு பொய்கதை. பாமர ஜனங்களையும், விவேகமற்ற ஜனங்களையும், மத விஷயத்தைத் தெரியாத மூடர்களையும் நம்பும்படியாகச் செய்து பார்ப்பனர்களின் லாபத்திற்காக ஏற்படுத்தின புராணங்களைப் பின்பற்றி எழுதி வைத்த ஒரு கிளைப்புராணப் பொய்க்கதையின் வைபவமே மாமாங்கமல்லாமல் சத்தியமல்ல. அந்த சத்தியமல்லாத கதையின் ஆதாரத்தின் பேரில் தாங்கள் யாத்திரை போவதாகச் சொல்லுவதே அசத்தியம். சத்தியமில்லாத பொய்க்கதையை ஜனங்கள் நம்பவேண்டுமென்று தாங்கள் யாத்திரை போவதாகச் சொல்லுவதும் அசத்தியம். அதனால் தங்கள்சமயசத்தியத்தை விட்டு குருக்கள் கட்டுப்பாடுகளும், புரட்டுகளும் என்றும் நிலை நின்று, அதனால் நீங்களும் உங்கள் சமூகமும் லாபமடைய வேண்டுமென்கிற எண்ணம் ஏமாற்றுச் சத்தியவாக்கெனக்காட்டும் வஞ்சனையான அசத்தியமாகும். அதெப்படி எனில்.

சமய சத்தியம் வேறு, குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை நீங்கள் உணர்வீர்கள். குருக்கள் கட்டுப்பாட்டை சமய சதியமென்று ஜனங்கள் நம்பும்படியாகச் சொல்லுகிறீர்கள். குருக்கன் கட்டுப்பாடு சமய சத்தியமாகுமாவென்று கேட்டால் அதற்கு இது ஆதாரம் இதற்கு அது ஆதாரமென்றும் அது அவர்கட்கு, இது இவர்கட்கு என் சொல்லுகிறீர்கள். இவ்விதமான அசத்தியப்பிரயத்தின இயல்புதான் பிராமணன் குடிக்கப்படாது மற்றவர்கள் குடித்தால் பரவாயில்லை என்று சொல்லும்படியாகச்செய்தது.

நதிகளில் குளித்தால் பாவம் போகுமென்பது சத்தியமா? சத்தியமென்றால் உங்கள் வேதாந்த சாஸ்திரங்களெல்லாம் பொய் யென்று தானே ஏற்படும். நம்பிக்கையேபிரதானமென்றால் எதற்கும் நம்பிக்கை உபயோகப்படாதே? நம்பிக்கை யென்பது ஒரு ஏற்பாடே ஒழிய சத்தியமல்லவே? நம்பிக்கையெல்லாம் சத்தியமாகவிருந்தால் புத்தி, அறிவு, சிந்தனை சக்தி முதலியவைகளுக்கு வேலை என்ன? புத்திக்குத் தகுந்த நம்பிக்கை இருக்கவேண்டுமென்றால் அது ஒரு திருப்திக்கே ஒழிய காரியத்தில் பலனில்லையே?

நதிகளில் குளித்த பாவம் நதிகளில் தங்குவதும், அந்த நதிகளான கங்கை, யமுனை, நர்மதா, சிந்து, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி, துங்கபத்திரா, தாம்பரபரணி முதலிய ஒன்பது நதிகளும் அந்தப் பாவத்தைத்தாங்காமல் பெண்களாகி கைலாசத்திற்குப் போய் சிவபெருமானைக் கண்டு அந்தப் பாவத்தைத் தீர்க்க வழி கேட்டது சத்தியா? சிவபெருமான் அந்தப்பெண்களிடம் நீங்கள் காசியிலிருங்கள் நான் கும்பகோண மகாமகத்திற்குப்போவேன், அங்கே ஒரு குளமிருக்கிறது, அதில் குளித்தால் உங்கள் பாவமெல்லாம் போய் விடும் என்று சொன்னது சத்தியமா? சிவபெருமான் கும்பகோணத்திற்கு வந்து அந்த நதியான ஒன்பது பெண்களும் போய் அந்த மாமாங்க குளத்தில் குளித்துப் பாவத்தை தீர்த்துக்கொண்டது சத்தியமா? அதைப்போல ஜனங்களும் குளித்தால் பாவம் போகுமென்பது சத்தியமா? அந்த ஒன்பது தீர்த்தங்களும் அந்தக் குளத்தில் பொங்கியது என்று ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்களே அது சத்தியமா? இந்த அசத்தியத்தை ஜனங்கள் நம்பும்படியாக உங்கள் சமயமும், ஆச்சாரி, குருக்கள், புரோகிதர்களும் அறிவற்ற ஜனங்களை நம்பும்படியாக செய்திருக்கிறார்களே அது சத்தியமா? இந்த அசத்தியமான நம்பிக்கையைப் பின்பற்றிவந்த முன்னோர்களின் வழக்கப்படியே பின்பற்றுவது தான் தருமமென்று சொல்லும் தங்கள் உபதேசமொழியில் சத்தியமுண்டா? தாங்களும் மகாமகத்தை நம்பி யாத்திரை புறப்பட்டது சத்தியமா? நம்பாமல் பாமர ஜனங்களையும் ஆலோசனையற்றவர்களையும், விவேகமில்லாதவர்களையும், முழு மூடர்களையும் பிரயோஜனமில்லாத சத்தியம் கெட்ட வழிக்கு ஓட்டிச் செல்லும் தங்கள் எண்ணம் சத்தியமாகுமா? பார்ப்பானுக்குக் கொடுத்துக் குளித்தால் தான் பாவம் போகுமென்று நினைக்கும்படியாக செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு சத்தியமா? மனுஷிய உத்தம லட்சியத்தைப்பரவச் செய்தல் முக்கியமல்ல. தங்கள் கூட்டத்து லாபமே பெரிதென்றும் நினைத்துக்கொண்டிருப்பது சத்தியமா? அந்தத்திறமையைவளர்ப்பதாகிய கல்நெஞ்சம் பிரதாபம் சத்தியமா? தெய்வ விரோதமான இந்தக் குருட்டுக் கொள்கையைப் பிரசாரம் பண்ணுவது சத்தியமா? தன்னலம் கொண்ட தங்கள் யாத்திரையை பிரமாண்டமாக காட்டி சத்தியத்தைக் காற்றிலே தூற்றி பலவிததந்திரங்களால் ஜனங்களுக்கு அசத்தியத்தை சத்தியமென்று கற்பிக்கப்படுவது சத்தியமா?

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# மகாமகமும், காட்டுமிராண்டிகளும்.

(நாகை தோழர் கே. முருகேசன்)

தோழர்களே! இதிலே குறிப்பிட்டிருக்கும விஷயங்களை கவனமாக வாசித்து ஒரு முடிவிற்கு வரவேண்டுகிறோம்.

ஆப்பிரிக்காவிலுள்ள பினேன் என்ற நகரம் நைஜிரியாவிற்கு தெற்கே உள்ளது. அந்த பினேன் நகரத்திற்கு 'ரத்தம் தோய்ந்தநகரம்' என்று சொல்வார்கள். காட்டுமிராண்டிகளாகிய இவாகள் அன்னியர்கள் தங்களது ஊருக்கு வந்தால் அவர்களை வெட்டி வீழ்த்திவந்தனர். சுமார் 400 வருடங்கட்குமுன்; முதன் முதலாக போர்ச்சுகேசிய தூதர்கள் (மதப்பரப்பாளர்கள்) இவ்வூருக்கு வந்தனர். இவர்களில் ஒருவரை, காட்டுமிராண்டிகளின் மதக்குருகொன்று, அவனுடைய இருதயத்தை புசித்துவிட்டு, தான் முன்பு இருந்ததைக்காட்டிலும் அதிகப்படியான சக்தியை சம்பாதித்து விட்டதாக கூறினன். போர்ச்சுகேசிய தூதனுடைய வஸ்திரத்தையும் சிலுவையும் அவன் அணிந்து கொண்டான். நாளாவட்டத்தில் வஸ்திரம் கிழிந்து போகவே, அவ்வூரின் நதிக்கரையில் அகப்படக்கூடிய வெண்ணிறமான ஒரு வஸ்துவை பசை செய்து உடம்பு முழுதும், வருடத்திற்கு ஒரு முறைவரக்கூடிய "மோகூ" திருவிழாவின் போது தடவிக்கொள்வதோடு, சிலுவையையும் கழுத்தில் அணிந்து கொண்டான்.

வருடா வருடம் 'மோகூ'திருவிழா அங்கு நடக்கும். காட்டு மிராண்டிகளின் அரசன் மோகூ திருவிழாவை வெறுத்ததோடல்லாமல் நடக்காதபடி செய்யலாமென்றாலும், அதுமதக்குருவின் அதிருப்தியை உண்டாக்குமென்று பயந்துகொண்டு மதக்குருவின் பாட்டிற்கு ஒத்தூதுவான். குறிப்பிட்ட தினத்தில் பெருந்திரளான காட்டுமிராண்டிகள் அரசனுடைய அரண்மனைக்கு சமீபமாக திருவிழா நடக்கக்கூடிய இடத்திற்கு வந்து சேருவார்கள். மோகூத்திற்கு போக தயாராக இருக்கும் நூற்றுக்கணக்கான காட்டுமிராண்டிகளிடம்தான் இங்கு சௌகரியமாகஇருப்பதாகவும், பிறகு தான் வருவதாகவும் மூதாதைகளிடம் சொல்லுங்கள் என்று கூறியவுடன் மதக்குருவின் கட்டளைப்படி கொலையாளிகள் மோகூத்திற்கு அனுப்ப ஏற்கனவே தயார் செய்து வைத்துஇருந்தவர்களின் தலைகளை வெட்டிமுண்டங்களை ஒரு குழியில் தள்ளி விடுவார்கள்.

இந்த நடவடிக்கைகளைப்பார்த்துக் கொண்டிருக்கும் காட்டுமிராண்டிகளில் சிலர் தாங்களும் மோகூத்திற்கு போக தயாராக இருப்பதாக கூறி, தங்களையும் மோகூத்திற்கு அனுப்ப வேண்டுமென்று அரசனை கெஞ்சுவார்கள். அரசன் அவர்களின் வேண்டுகோளுக்கு அப்பொழுது சம்மதிப்பதில்லை.

இம்மாதிரியான சம்பவங்கள் அந்நாடு பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு வந்த பிறகு அடியோடு நின்று விட்டதல்லாமல், காட்டுமிராண்டிகளின் மதக்குருவை பிரிட்டிஷார் தண்டித்திருக்கின்றனர். காட்டுமிராண்டிகள் அடிமை நீங்கி, ஆண்மையுடன் நாகரீக வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

ஆனல் நமது இந்திய மக்களில் பலர் ஆப்பிரிக்கா தேசத்து காட்டுமிராண்டிகளின் செய்கையை தோற்கடிக்கும் விதத்தில் நடந்து வந்திருக்கின்றனர். வருகின்றனர். என்பதை யோசித்துப்பார்க்கும் எந்த நடரும் கண்டிப்பாய்ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். நமது மக்களின் காட்டுமிராண்டித்தனத்தை நிரூபிக்க சமீபத்தில் நடக்கும் 'மாமாங்கத்தை' எடுத்துக்கொள்வோம்.

மதத்தலைவர்கள் பன்னிரண்டு வருடங்கட்கு ஒரு தடவை தங்களுக்கு எவ்வளவு அடிமைகள் இருக்கிறார்களென்றும், தங்களது வாழ்க்கை இராஜபோகத்துடன் நடக்குமாவென்றும், எந்தெந்த வகையிலும் ஆசை வார்த்தைகள் காட்டி கஷ்டப்பட்டு பொருள் சம்பாதிக்கும் ஏழைமக்களை வஞ்சித்து அவர்களுடைய பொருளை நாஜுக்காக வாங்கலாமென்றும், எத்தனை பணக்காரர்கள் புதிதாக தங்களது காலில் விழுகின்றார்களென்று கண்டு அவர்கள் உதவியால் தங்களது காரியங்களை எவ்வளவு தூரம் சாதித்துக்கொள்ளலாமென்கிற விஷயங்களை பிறர் அறியாவண்ணம் கண்டு கொள்வதற்காக ஏற்படுத்தின ஏற்பாடுதான் இந்தமாமாங்கமென்று சொல்வோம்.

லக்ஷக்கணக்கான மக்கள் மாமாங்க குளம் என்று சொல்லக்கூடிய தண்ணீர் அவ்வளவையும் இறைத்து விட்டு வெறும்அடிவண்டல்களையும், சேற்றையும் மாத்திரம் மீதிவைத்து அதில் பல மக்கள் குளிப்பதால் தொத்து நோய்கள் பரவா வண்ணம் கந்தகப் பொடியை கலக்கிவிட்டிருக்கும் குளத்தில், பன்றிகள் சாக்கடையில் புரண்டு சேற்றைப் பூசிக்கொள்வது போல இக்குளத்தில் குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொள்வது யாது காரணமென்று ஆராய்ந்து பார்க்குமிடத்து எப்படி மீன்கள் தூண்டியின் முள்ளில் புழு இருக்கிறது, அதை நாம் தின்றால் முள்ளில் அகப்பட்டுக் கொள்வோம் என்று தெரியாது, புழுவைத்தின்று முள்ளில் அகப்பட்டுக் கொள்கிறதோ அதைப் போன்ற மதத்தலைவர்களாலும் அவர்களது சிஷ்யர்களாலும், மோக்ஷம்,நரகம், பாவம், புண்ணியம் என்ற அர்த்த மற்ற வார்த்தைகளை சொல்லி, அதற்கு ஆதாரமாக, உண்மையாகவே பல சம்பவங்கள் நடந்ததாக, ஏடுகளில் எழுதி, மக்களிடையே பரப்பிய தோடல்லாமல், அந்தந்த காலத்தில் இருந்த அரசர்களின் உதவியால் பிரசாரம் 'செய்து தாங்கள் சொல்வதை மக்கள் நம்பும்படி செய்து விட்டனர்.

மீனுக்கும், ஆஸ்திகனுக்கும். என்ன வித்தியாசமென்று கேட்கின்றோம்? மனிதனுக இருந்தும் கூட மீனைப்போன்று நடந்துகொண்டால், அவனை காட்டு மிராண்டி என்று சொல்வதில என்ன தவறு இருக்கிறதென்று கேட்கின்றோம். யோசித்துப் பார்க்கு மிடத்து நம்மக்களை மீன்களாக பாவித்து மதமென்னும் புழுவை தூண்டி முள்ளில் வைத்து தூண்டிக்காரர்களான மதத் தலைவர்கள் தூண்டியை நம் மக்களிடையே போட்டு அவர்களுடைய காரியங்களை சரிப்படுத்திக் கொண்டு வந்திருக்கின்றனர்.

கேவலம் மீன்கள் கூட தூண்டியில் சில வேளைகளில் அகப்பட்டு தப்பித்துக்கொண்டு போகின்றன. இன்னும் சில வேளைகளில் தூண்டி முள்ளில் இருக்கும் புழுவை தின்று விட்டு ஓடிப் போகிறது. மீன்களைப்போன்ற கஷ்டம் நமக்கில்லை. நாம் மீன்களல்ல, மனிதர்கள். மதமானதுமக்களை காட்டு மிராண்டிகளாக்குகின்றது என்று தெரிவதால் மதமான புழுவை ஒழிக்க ஒவ்வொருவரும் பாடுபடுவதோடல்லாமல் தூண்டிக்காரர்களான தலைவர்களை தண்டிக்கவும் முன் வர வேண்டும்.

ஆப்பிரிக்காவின் பினேன் தேசத்து காட்டு மிராண்டிகளின் மதக்குருவை தண்டித்த இந்த பிரிட்டிஷ் அரசாங்கமானது, இந்தியாவில் மதத்தலைவர்களுடைய பாட்டிற்கு ஒத்தூது வதைக்கண்டு வருந்த வேண்டியிருக்கிறது. யோக்கியமான, நாணயமான, நியாயமான அரசாங்கமாயிருந்தால் மதத்தலைவர்களை தண்டிடப தோடல்லாமல் "மகாமகம்" போன்ற சம்பவங்கள் நடைபெருத வண்ணம் செய்வதைவிட வேறுயென்ன நன்மை இந்தியாவிற்கு செய்யப் போகிறார்களென்பது விளங்க வில்லை.

கும்பகோணத்தில் நடக்கும் திருட்டு, கொலை, தொத்து நோய்களால் சாகும் மக்கள், வீண் பொருட்செலவு, பார்ப்பன கும்மாளம், முட்டாள் பட்டம் முதலிய விஷயங்களைப் பற்றி யோசித்து பார்க்கும் எந்த நபரும் மகாமகத்திற்கு போக மாட்டார்.

---

## ஈரோடு, சுயமரியாதை வாலிபர் சங்கம்.

சென்ற 25-2-33ந்தேதி மாலை 6½ மணிக்குதோழர் ஈ. வெ இராமசாமி அவர்களின் மேல்மாடியில் தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடை பெற்றது.

அக்கூட்டத்திற்கு 150 மேற்பட்ட வாலிபர்கள் விஜயம் செய்திருந்தார்கள். முதலில் தோழர் ஈ. வெ இராமசாமி யவர்கள் இக்கூட்டம் சங்கநிர் வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கூட்டப்பட்டதென்றும் சுயமரியாதை சமதர்மக் கக்ஷியாரால் நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானத்தை விளக்கி அதை செய்கையில் நடத்திக் காட்ட வேண்டு மென்று கூறி சங்கத்திற்கு கீழ்கண்டவர்களை நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று பிரரேபித்தார் அவர்கள் பெயர்கள் வருமாறு:—

தலைவர்:— தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி.

உபதலைவர்:— எ. கோவிந்தசாமி.

காரிய தரிசிகள்:—

T. D. கோபால்.

H. பாஷா..

பொக்கிஷதார்:—

N. கரிவரதசாமி.

இவர்களை தெரிந்து எடுத்த பிறகு மற்ற மெம்பர்களை அடுத்த கூட்டத்தில் தேர்ந்தெடுப்பதென்று கூறினர். இதை யாவரும் ஆதரித்தார்கள். பின்தோழர்கள் அ. ரத்தினசபாபதி ஈ.வெ.ராமசாமிஆகிய இருவரும் "மேல்நாட்டில் சமதர்மக் கொள்கை" என்பது பற்றி மக்கள் மனதில் பதியுமாறு விளக்கமாகக் கூறினர்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

---

## சென்னை 2வது சுயமரியாதை மகாநாடு.

சென்னை இரண்டாவதுசுயமரியாதை மகாநாடு 5ளது மார்ச்மீ 5ந்தேதி எக்மூர், சிந்தாதிரி பேட்டை பாலத்தருகிலுள்ள A. I. E. சங்க ஹாலில் தோழர் காஞ்சிபுரம்சி. கலியாண சுந்தரம்தலைமையில் நடைபெறும் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். தோழர் வி. பி. எஸ். மணியர் வரவேற்புக் கழகத்தலைவர். பல சுயமரியாதைத் தோழர்கள் பேசுவார்கள் என தோழர் லிங்கம் தெரிவிக்கிறார்.

# தோழர். ராமச்சந்திரன் அவர்கள் மரணம்.

[தோழர் எ. எஸ். அருணாசலம்]

சிவகங்கை வக்கீல் தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்கள் சென்ற இரண்டு மாத காலங்களாக நீர் ரோகத்தினால் கஷ்டப்பட்டு சென்ற 26-2-33 ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணிக்கு திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் காலஞ்சென்றார். காலஞ்சென்ற தோழர் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஆத்திக்காடு தெக்கலூரில்பிறந்தவர். இவரது மூதாதையர்கள் சிவகங்கை அரசர்களால் அவர்களது ஜமீன் எல்லைக்கு காவலர்களாக சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பிரான்மலைக்கு அனுப்பப்பட்டவர்கள். காலஞ்சென்றதோழர் அவர்கள்திருவனந்தபுரம் மகாராஜாஅவர்களது கல்லூரியில் பி. ஏ. வகுப்புவரை படித்து மதுரை சேதுபதி உயர்தரகலாசாலையில் ரசாயனஉபாத்தியாயராக இருந்தார். பின்னர் சென்னை சட்டக்கல்லூரியில் படித்துவிட்டு 1913ம் ஹு மதுரையில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். பின் தமது சொந்த இடமாகிய சிவகங்கை சென்று 1920ம் ஹு முதல் சிவகங்கை ஜமீனின் வக்கீலாக நாளதுவரை உழைத்தார். 1917ம் ஹுத்திலே பிராமணரல்லாதாரியக்கம் தோன்றியவுடன் அதில் சேர்ந்து தென்னிந்திய நலஉரிமைச்சங்கத்தில் இராமநாதபுரம் ஜில்லாபிரதிநிதியாகஅங்கம்வகித்துகொண்டிருந்தார்.பிராமணரல்தார் மகாநாடு நடக்குமிடமெல்லாம் நமது இராமச்சந்திரன் அவர்களை காணலாம். 1925ம் ஹு அகில இந்தியபிராமணரல்லாதார் காங்கிரஸானது காலஞ்சென்ற பனகாலரசர் தலைமையில் அம்ரோட்டியில் நடந்த பொழுது அதற்கு தமிழ்நாட்டிலிருந்து சென்ற சிலரில் நமது இராமச்சந்திரனும் ஒருவராவர். 1926ம் ஆண்டு முதல் அரசியல் துறையில் ஸ்தலஸ்தாபனங்களாகிய சிவகங்கை யூனியன் போர்டு தாலூகா போர்டுகளில் தலைவராகவும், இராமநாதபுரம் ஜில்லா கல்விக்கழகம் ஜில்லா போர்டுகளில் அங்கத்தினராகவும் உழைத்தார். சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட இராமநாதபுரம் ஜில்லா மதுவிலக்குகமிட்டி, தேவஸ்தானக்கமிட்டி முதலியவைகளில் தலைவராகயிருந்து பிராமணரல்லாத மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச்செய்தார். சுயமரியாதை இயக்கத்தின் 1927-ம் ஆண்டில் கலந்து அவ்வியக்கத்தாரால் நடத்தப்பட்ட திருநெல்வேலிஜில்லா மகாநாடு, சிவகாசி தாலூகா மகாநாடு, ஈரோடு மதுவிலக்கு மகாநாடுகளிலும் தலைமை வகித்தார். சுயமரியாதை இயக்கத்தார் சொல்லியவைகளை உடனே அமுலுக்கு கொண்டுவருவதில் நமது காலஞ்சென்ற தோழர் அவர்களைப்போல் வேறு யாரும் இருக்கமுடியாதெனக்கூறலாம். சிறப்பாக இராமநாதபுரம்ஜில்லாவில் தாழ்த்தப்பட்டவர்களுடைய குறைகளை போக்குவதில் இவர் எவ்வளவு கஷ்டத்துடனும் பொறுமையுடனும் உழைத்து வந்தாரென்பதை அவருடன் நெருங்கிப்பழகிய நண்பர்களுக்குத்தெரியும், ஆதித்திராவிடர்களின் கூட்டங்களுக்கு செல்லும் சமயமெல்லாம் ஜாதி இந்துக்களின் உபத்திரவம் ஏற்படாதபடி தமது துப்பாக்கியையும் ஆதாரமாகவே கொண்டு செல்வார். அவரிடம் கோபம் என்பதையே பார்க்க முடியாது. வக்கீல் என்ற முறையில் அவர் தமது கட்சிக்காரர்களிடம் நடந்துகொள்வதைப் பார்த்தால் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் சுமார் 20 படி நிலக்கடலையை ஒரு கட்சிக்காரன் பீசு கொடுத்து தனது கேசுக்கு ஆஜராகவேண்டும் என்று சொல்லவும் அவனுடைய கேசுக்கு ஆஜராகி கேசையும் ஜெயித்தாராம். சிவகங்கை எஸ்டேட் வக்கீல் தொழிலிலும் தாலூகா போர்டு தலைவராயிருந்த காலத்திலும் நியாயத்திற்கு விரோதமாக பலர் லஞ்சம் கொடுத்து தமது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள முயன்று தம் முயற்சி பலியாமல் சென்றார்கள். வாதம் செய்வதில் வெகு சமர்த்தர். எவருடனும் அன்பாகபேசுவதும் தமது கொள்கைகளை தாட்சண்யமின்றி எவருக்கும் பயப்படாமல் எதிரேயே சொல்வதிலும் நமது தோழர் சிறந்தவர். தமது தொண்டு மற்றும் போதாது தமது துணைவியாரையும அப்பழக்கத்திலீடுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் சமீபத்தில் இராமநாதபுரம்ஜில்லா போர்டுக்கு நடந்த பொதுத்தேர்தலில் பெண்கள் பிரதிநிதியாக தமது மனைவி கிருஷ்ணம்மாள் அவர்களையும் நிறுத்தி தானும் ஜில்லா போர்டுக்கு தேர்தலில் நின்றார். நாமினேஷன் பாரம் போட்டபின் நமது தோழர் இராமச்சந்திரன் அவர்களுக்கு ஏற்பட்ட சீக்கினால் எலக்ஷன் வேலை செய்யமுடியாமல் தோற்றது. பெண்கள் பிரதிநிதியாக போட்டியின்றி தோழர் இராமச்சந்திரன் கிருஷ்ணம்மாள் அவர்கள் சிவகங்கை தாலூகா போர்டுக்கும் ஜில்லா போர்டுக்கும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக சிக்கு முற்றி நமது தோழரை நம்மைவிட்டு பிரித்துகொண்டுபோய் விட்டது. நமது உத்தம நண்பரை ஆதித்திராவிடர் தந்தையை, ஏழை பங்காளரை நாம் இழந்துவிட்டோம். நமது அனுதாபம் தோழர் கிருஷ்ணம்மாள் இராமச்சந்திரன் அவர்களுக்கும் அவரதுகுமாரரான தோழர் இராமசுப்ரமணியம் அவர்களுக்கும் உரியதாகுக.

# கும்பகோண மகாமகம்.

(பாரதி தாஸன்)

(தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே என்ற மெட்டு.)

கும்பலுண்டு கும்பகோண மாமகத்திலே—தும்பல்
வெம்பலுண்டு வேகலுண்டு மாமகத்திலே
நம்பலுண்டு தெய்விகத்தை மாமகத்திலே—எம்பி
நக்கலுண்டு வெறுங்கையை விடுவதின்
அம்பலத்திற் பெண்டு பிள்ளை அல்லலுறுங்கால்—ஓம்
அரஹர என்பதுண்டு மாமகத்திலே
சம்பிரமசங் கீதமுண்டு மாமகத்திலே—மக்கள்
தாகமுற்று மாய்வதுண்டு மாமகத்திலே

தண்ணருட் கடவுளுண்டு மாமகத்திலே—வந்த
சனங்களைக் காக்குமென்று சாத்திரமுண்டு.
கண்ணெதிரிற் பேதி வந்து தாக்குகையிலே—பாடை
கட்டவும் சலிப்பதுண்டு மாமகத்திலே
எண்ணிறந்த வசதிகள் அன்ன சத்திரம்—இவை
எங்கணும் இருப்பதுண்டு மாமகத்திலே
கண் பிதுங்கப் பார்ப்பனர்கள் உண்டு களிப்பார்—நெட்டும்
கைகளற்ற ஏழை மக்கள் ஏங்கி விழிப்பார்.

சாத்திரங்கள் சொல்லுமந்த க்ஷேத்திரத்திலே—மோக்ஷம்
தருகின்ற தீர்த்தமுண்டு சனங்களுக்கே
ஆத்திரத்திற் குளக்கரை செல்லுவதுண்டு—சென்ற
ஆளையே நெருட்ட அதில் நாற்றமுமுண்டு
தோத்திரங்கள் செப்புபடி விஷ சுரத்தில்—சிலர்
தொத்தி முத்தி சேர்வதுண்டு மாமகத்திலே
நேத்திரங்கள் உள்ளவர்கள் தீர்த்த குளத்தில்—மக்கள்
நெளிவதைக் கண்டு மனம் நெளிவதுண்டு.

வர்த்தகமும் இன்றித் தொழில் ஏதுமின்றி—மக்கள்
வாடுகின்ற தருணத்தில் பக்திமனமும்
முத்தியென்றும் பக்தியென்றும் மூலைமுடுக்கில்—பொய்ம்
மூட்டைகளை விட்டு மக்கள் மூளைதனிலே
பித்தமதை வளர்த்திடும் சபலத்தால்—பெரும்
பிடைகளும் வறுமையும் பெருகுமன்றோ?
மொத்தமழித் திட்டமாம் கோடியினிலோர்—என்
மூகத்தினை பயனும் விளைவதுண்டோ?

வானரத் தோஷிருந்து விளம்பரமாய்—ரயில்
வர்த்தகர்க்கும் இதில் மிக்கவல்லுண்டோ?
சனநிலை பாழ்பருகும் மக்கள் பணத்தை—இதில்
இழந்துச் சுகம் பெருக்கும் எண்ணமல்லவோ
தானதருமங்களென்று சாற்றிடுவதும்—பல
சாமிக்கென ஊர்மக்களை ஏய்த்திடுவதும்
பானைவந்த வயிற்றினர் செல்வர்களுக்கும்—வஞ்சம்
பார்ப்பனர்க்கும் புரோகிதர்க்கும் பசப்பர்கட்கும்

லாபம் வருவதன்றி ஏழைகளுக்கே—ஒரு
நன்மைகிடைக்குமென்று யாவருரைப்பான்?
தீபமெடுத் தினுதன் உண்மை தேடுவதுண்டோ?—நாளும்
தெளிந்து தெளிந்துரைக்கும் சேதியல்லவோ!
கோபமிகப்பெருகி ஆத்திகமென்னும்—நாய்
குரைக்கின்ற அவலிலிற் குறைச்சலில்லை
ஆபத்தில் வாழுகின்ற பொது மக்கள்பால்—துளி
அன்பும் செலுத்துவதில் எண்ணமில்லையே.

## ஏஜெண்டுகளுக்கு அறிவிப்பு.

புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்யும் சில ஏஜெண்டுகள் சந்தாதாரர்களுக்கு குறைத்துக்கொடுக்கும் விலைப்படி. (சில புஸ்தகங்களுக்கு குறைக்கப் பட்டிருக்கிற படி) சங்களுக்கும் விலை போடும்படி எழுதுகிறார்கள். அந்தப்படி செய்ய முடியாமைக்கு வருந்துகிறோம். ஏஜெண்டுகள் கமிஷன் பெற வேண்டியவர்களாயிருப்பதால் முழு விலையே தான் புஸ்தகங்களுக்குப் போடப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குடி அரசு புத்தகசாலையார்
ஈரோடு.


# குடி அரசு.

ஈரோடு 1933 மார்ச்சு௴ 5-உ


## காங்கிரசும், ஒத்துழைப்பும்.

—:0:—

சுயமரியாதை இயக்கத்திற்குள்ளாக சுயமரியாதை சமதர்மக்கட்சி என்பதாக ஒரு கிளை தோன்றி அது சட்டசபை ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவைகளைக் கைப்பற்றவேண்டும் என்ற ஏற்பாடுகளைச்செய்தவுடன் காங்கிரஸ் தலைவர்கள் என்போர்கள் சிலருக்குள்ளும் சட்டசபைக்குச் செல்லவேண்டும் என்கின்ற ஆசை தோன்றி அதை வெளிப்படுத்த சமயம் பார்த்துக்கொண்டே இருந்து அதற்கு சில சாக்குகள் ஏற்பாடுசெய்து இப்போது மெள்ள மெள்ள வெளியாக்கிவிட்டார்கள்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில்,

"காங்கிரசுக்காரர்கள் வைதிகர்களைப்போல் பிடிவாதக்காரர்கள் அல்ல. அவர்களுக்கு சட்டசபைகளின்மூலம் பலன் ஏற்படும் என்று தோன்றினால் உடனே சட்டசபைகளுக்குச்செல்வார்கள்" என்று குறிப்பிட்டிருந்ததை வாசகர்கள் படித்திருக்கலாம். இந்த அறிக்கையின் கருத்தானது காங்கிரஸ் சட்டசபை நுழைவை ஆமோதிக்கப்போகின்றது என்றும், ஆகையால் சட்டசபை செல்ல ஆசையுள்ளவர்கள் காங்கிரசை விட்டு விட்டு வேறு கட்சியில் சேர்ந்துவிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளுவதேயாகும். அன்றியும் அதற்கேற்றாற்போல் சட்டசபைகளை லக்ஷியம் செய்தும் ஆதரித்தும் தோழர் காந்தியவர்கள் "அநேக விஷயங்களுக்கு சட்டம் தடையாயிருப்பதால் அத்தடையை விலக்க சட்டம் செய்ய வேண்டும்" என்று அடிக்கடிபேசியும், எழுதியும் வருவதின்மூலம் ஜனங்களுக்கு சட்டசபையின் அவசியமும் பிரதானமும் விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றதுடன் தோழர் ராஜகோபாலாச்சாரியார் தீண்டாமை விலக்கு, கோவில் பிரவேசம், ஆகிய மசோதாக்களின் சாக்குகளை வைத்துக்கொண்டு அடிக்கடி டெல்லிக்குப் போவதும் சட்டசபை மெம்பர்களுடன் பேசுவதும் அவர்களுக்கு அறிக்கை விடுவதுமான காரியங்களால் சட்டசபை பிரவேசம் அவசியம் என்று ஜனங்களுக்குப் படும்படி செய்வதும், அதில் ஜனங்களுக்கு மோகம் உண்டாகும்படி செய்வதுமான காரியத்தைச் செய்துவருகிறார்.

இந்தக்காரணங்கள் சட்டசபை பிரவேசம் என்பதை மாத்திரம் காட்டுவதாயில்லாமல் காங்கிரசானது சர்க்காருடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கின்றது என்பதையும் வெளிப்படுத்த ஒரு தந்திரமாகும்.

ஏனெனில் லார்ட் வில்லிங்டன் பிரபு "தோழர் காந்தியையும் மற்றும் சில காங்கிரசுத்தொண்டர்களையும் விடுதலை செய்யவேண்டுமானால் காங்கிரசின் சட்டமறுப்புக்கொள்கை மாறவேண்டும்" என்றும், தோழர் காந்தியவர்கள் சட்ட மறுப்பு செய்வதில்லை என்று சூசனை காட்டவேண்டும் என்றும் பல தடவை சொல்லி வந்திருப்பதை உத்தேசித்து சர்க்காருக்கும் இந்த விஷயம் தெரியட்டுமென்று கருதி இப்படிச் செய்கிறார்கள். இதைக்கண்ட பின்பு சர்க்காரார் உடனே காங்கிரசுக்காரர்களை விடுதலை செய்து விடவும் கூடும்.

இந்த சமயம் காங்கிரசுக்காரருடைய உதவி சர்க்காருக்கு மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் இந்நாட்டில் மாத்திரமல்லாமல் உலகம் முழுவதிலுமே இது சமயம் ஏற்பட்டிருக்கும் சமதர்ம உணர்ச்சியை விழித்து ஒழிக்க ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாம் இந்தியாவைத்தான் நம்பியிருக்கின்றன. அதாவது இந்தியாவைத் தனது சொத்தாகக்கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வலுவேதான் இன்று உலக சமதர்மத்திற்கு எதிராயிருக்கின்றது என்று தைரியமாயிருக்கின்றன. அன்றியும், இந்தியா தனது சொத்து என்கின்ற உரிமை பிரிட்டனுக்குள் என்று ஒழிக்கப்படுகின்றதோ அன்றே உலகசமதர்ம உதயகாலம் என்று அநேக சமதர்மவாத நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். உண்மையும் அப்படியேதான் இருக்கின்றது. எந்தக்காரணத்தை முன்னிட்டும் இந்தியா பிரிட்டிஷாருக்குச் சொந்தம் என்கின்ற தத்துவம் மாறாமல் இருப்பதற்காகவே புதிய அரசியல் சீர்திருத்தத்தில் மகாராஜாக்களைப் பிணைத்தும், மற்றும் காங்கிரசையும் காந்தியாரையும் பிணைத்தும் கொண்டதுமானகாரியங்களாகும்.

எந்தக்காரணத்தை முன்னிட்டாவது இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டுமானால் காங்கிரசும் அதன் அஸ்திவாரமான இந்திய முதலாளித்தன்மையும் ஒழிந்தாலொழிய முடியவே முடியாது என்பது பிரிட்டனுக்கு நன்றாய்த் தெரியும். அதுவே உண்மையுமாகும்.

ஆதலால்தான் வெகு சீக்கிரத்தில் முதலாளி தத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்கும் காங்கிரசும், முதலாளி தத்துவ ஆட்சியாகிய சர்க்காரும் தங்களுடைய போட்டியை விட்டுவிட்டு வெகு சீக்கிரத்தில் வெளிப்படையாகவே தோளோடு தோள் பிணைத்து வெளிக்கிளம்பிசமதர்ம உணர்ச்சியை நசுக்கப் புறப்படப்போகிறார்கள். இதுவே நமது உறுதி. அதன்சூசனைகளேதான் இப்போது சர்க்கார் காந்தியையும் காங்கிரசுக்காரரையும் விடுதலை செய்ய "காங்கிரஸ் இனிசட்ட மறுப்புசெய்வதில்லை" என்ற சூசனையை கேட்பதும் காந்தியும், காங்கிரஸ் சட்டசபையைக் கைப்பற்றவேண்டும் என்று கருதுவதாகச் சொல்வதன் மூலம் சர்க்காரோடு ஒத்துழைக்கப் போகின்றோம் என்கின்ற சூசனையைக்காட்டுவதும்மான காரியங்களாகும். இந்த சூசனைகளானது வெகு சீக்கிரத்தில் சர்க்காரும், காங்கிரசும் ஊடவில் இருந்த நாயகனும் நாயகியும் ஊடல் தீர்ந்தபின் அடையும் காதல் பானத்தின் பலன் போல் கட்டிப்புரளச்செய்யப் போகின்றது என்பதில் சிறிதும் சந்தேகப் பட இடமேஇல்லை.

இதை தேசியவாதிகள், தேசியப்பத்திரிகைகள் என்பவைகள் மேளதாளத்தோடு ஆதரித்து வரவேற்கப்போகின்றார்கள் என்பதும் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

இப்பொழுதே தேசிய பத்திரிகைகள் இது விஷயத்தில் தங்களது அபிப்பிராயங்களை தெரிவித்துவிட்டன. அதாவது தமிழ்நாடு பத்திரிகையானது தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சட்டசபை என்றவுடன் "ஆச்சாரியாருக்கு இப்பொழுதாவது புத்திவந்ததா" என்று கேட்டுவிட்டு இதை "நல்லயோசனை" என்றும் சொல்லிவிட்டது. இந்து, சுதேசமித்திரன் என்ற பார்ப்பன பத்திரிகைகளும் காங்கிரஸ் ஸ்தம்பித்துப்போய் விட்டது, ஆதலால் வேறு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்தாகவேண்டும் (என்று எழுதுகின்ற பாவனையில்) "காங்கிரசு சட்டமறுப்பில் செலவழித்த ஊக்கத்தை சட்டசபையில் செலவழித்திருந்தால் எவ்வளவோ பலன் அடைந்திருக்கலாம்" என்றும் எழுதிவிட்டன.

சுயராஜ்யா என்னும் ஆந்திர பார்ப்பன தேசியபத்திரிகையும் சட்டசபை பிரவேசமே நல்ல மருந்து என்று கருதி இருப்பதாக ஜனங்களுக்கு காட்டிக்கொண்டுவிட்டது. ஆகவே சட்டசபை தேர்தல் வந்தவுடன் காங்கிரஸ் வாதிகளை, தேசிய வாதிகளை சட்டசபைகளுக்கு அனுப்புங்கள் என்று காந்தியும் ராஜகோபாலாச்சாரியும் "ஸ்ரீமுகம்" (உத்திரவு) வெளியிடவேண்டியதும் அதை மற்ற தேசியபத்திரிகைகள் கொட்டை எழுத்தில் வெளிப்படுத்தி விளம்பரம் செய்யவேண்டியதும் தான் பாக்கி இருக்கிறது. சிறையிலிருந்து வெளியாகும் தொண்டர்களுக்கு தேர்தல்வரை என்ன வேலை கொடுப்பது என்பதுதான் இப்போது காந்திக்கும் ஆச்சாரியாருக்கும் பெரிய கவலை என்றும் அதை உத்தேசித்தே ஹரிஜனவேலையை சிருஷ்டித்துப்பார்த்தார்கள். ஆனால்இதில் பட்டினி விரதப்புரட்டுகள் வந்து புகுந்ததால் அதன் செல்வாக்கும் இப்பொழுது ஒரு வழியில் குறைந்து போய்விட்டது.

ஆகவே இப்போது எப்படியாவது சிறிது காலத்திற்கு அதாவது அடுத்ததேர்தல்வரை காங்கிரசு ஸ்தம்பித்தது—ஸ்தம்பித்தபடிதான் இருக்கும். தேர்தல் வந்தவுடன் இந்து சுதேசமித்திரன் வேண்டிக்கொண்டிருப்பதுபோலவே காங்கிரஸ் இரட்டிப்பு முயற்சியுடன் வெளிக்கிளம்பக் கூடும். எப்படிஇருந்தபோதிலும் சமதர்ம உணர்ச்சியையும், புரட்சியையும் இந்த தந்திரங்கள் எல்லாம் அழித்துவிடமுடியாது என்கின்ற தைரியத்திலேயேதான் நாம் இருக்கின்றோம்.

## உண்மைத் தோழர் மறைந்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் உண்மைத் தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்கள் 26-2-33-ந் தேதி மறைந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் நாம் திடுக்கிட்டுப் போய் விட்டோம். நாம் மாத்திரமல்ல, சுயமரியாதை இயக்கத்தில் கடுகளவு ஆர்வமுள்ள எவரும் இச்சேதி கேட்டவுடன் திடுக்கிட்டிருப்பார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தோழர் ராமச்சந்திரனை இழந்தது சுயமரியாதை இயக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பெரு நஷ்டமேயாகும். தோழர் ராமச்சந்திரனைப் போன்ற உறுதியான உள்ளமும், எதற்கும் துணிந்த தீரமும் மனதில் உள்ளதை சிறிதும் எவ்வித தாட்சண்யத்திற்கும் பின் வாங்காமல் வெளியிடும் துணிவும் சாதாரணமாக வெகு மக்களிடம் காண்பது என்பது மிக மிக அரிதேயாகும். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்காக என்ற கிளர்ச்சி சுயமரியாதை இயக்கத்தில் வீறு கொண்டிருந்த காலத்தில் தோழர் ராமச்சந்திரன் அவர்கள் தாலூக்கா போர்டு முதலிய பல ஸ்தாபனங்களில் தலைவராய் இருந்த சமயம் ஒருபொதுக் கூட்டத்தில் பேசும்போது "இனி இந்தக் கையால் ஒரு பார்ப்பனருக்காவது உத்தியோகம் கொடுப்பதில்லை." என்று ஒரு உறுதி மொழி கூறி அதை ஒரு விரதமாய் கொண்டிருப்பதாக விளம்பரப்படுத்தினார். மற்றும் அவரது திருநெல்வேலி சு-ம மகாநாட்டின் தலைமை உரையில் (1929-ம் வருஷத்தில்) வருங்காலத்தில் சுயமரியாதை இயக்கத்தால் ஏற்படும் பலன் இன்னின்னவை என்று குறிப்பிட்ட சமயத்தில்,

"உலகம் எல்லாம் வழங்கப்படும் ஒரு பாஷை ஏற்படும்.—

உலகம் எல்லாம் ஒப்புக்கொள்ளும் ஒரு கொள்கை ஏற்படும்.

உலகம் எல்லாம் ஒரு ஐக்கிய ஆட்சி நாடாகும்.

உலகத்திலுள்ள சொத்துக்கள் பூமிகள் எல்லாம் உலகத்திலுள்ள மக்களுக்குச் சொந்தமாகும்.

வேலை செய்யாத சோம்பேரிகள் ஒருவர் ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். குற்றங்கள் குறைந்து விடும் நோய்கள் அகன்று விடும். மனித ஆயுள் இரட்டித்து விடும். மக்கள் வாழ்வில் உள்ளகவலைகள், பொறாமைகள் நீங்கி ஒருவருக்கொருவர் அன்பும் நட்பும் கூட்டுறவு முயற்சிகளும் தாண்டவமாடுவதுடன், மக்கள் சதாசந்தோஷத்துடன் இருப்பார்கள். என்று காஜித்ததுடன், தீண்டாமை என்பது மதக்கொள்கையைச் சேர்ந்தது என்பது முழுப்புரட்டென்றும் அது முழுதும் பொருளாதார சூழ்ச்சியின் அடிப்படையைக்கொண்டது" என்றும் பேசி இருக்கிறார்.

இந்த தத்துவங்களில் ஒரு சிறிதும் மாற்றமில்லாமல் இன்று சு. ம. இயக்கம் வேலை செய்து வருவதைப்பார்ப்பவர்கள் இவ்வியக்கம் யாதொரு புதிய வழிகளிலும் செல்லவில்லை என்பதை உணர்வார்கள். தோழர் ராமச்சந்திரன் நல்ல வாக்கு விசாலமுள்ள வக்கீலாகவும் தகுந்த வரும்படியும் மேலும்மேலும் பெரிய நிலைக்கு வரக்கூடிய நிலையும் சௌகரியமும் இருந்தும் அவைகளை லட்சியம் செய்யாமல் இயக்கத்திலேயே கவலைகொண்டு மற்றவைகளை அலட்சியம்செய்து வந்த உண்மைச்சுயமரியாதை வீரரேயாவர். இவரது வயது 48, அதாவது 1884-ல் பிறந்தவர் இவ்விளம் வயதில் இப்படிப்பட்ட உற்ற தோழரை இழக்க நேர்ந்தமைக்கு யாரே வருந்தாமல் இருக்க முடியும்? இவருக்கு 4-ஆண்மக்களும், 3-பெண்மக்களும் உண்டு. இவரது வாழ்க்கைத்துணைவியார் ராமனாதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தவராகவும் சிவகங்கை தாலூகா போர்டு அங்கத்தவராகவும் தகுந்த கல்வி ஞானமுள்ளவராகவும் இருக்கின்றார்கள்.

எனவே இவ்வம்மையார் இயற்கையை மதித்து துணைவரின் பிரிவை சடுதியில் மறந்து அவரது சுயமரியாதை இயக்கத்தில் அவரது கொள்கைகளையே கொண்டு உலக விடுதலைக்கும் உலக இன்பத்துக்கும் உழைக்க முன்வருவார்கள் என்றே ஆசைப்படுகின்றோம்.



காலஞ்சென்ற தோழர் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். (சிவகங்கை)

இவர் சென்ற 26-2-33.ல் இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூரில் காலஞ்சென்றார்.

---

## நாடார் பரிபாலன சங்க ஆண்டு விழா.

28-2-33 தேதி நாடார் பரிபாலன சங்க 6 வது வருட பூர்த்தி விழா சங்க ஹாலில் க்ஷத்திரிய ஹைஸ்கூல் ஆசிரியர் தோழர் என் பி. பாண்டியன் தலைமையின் கீழ் நடைபெற்றது. விழாவிற்கு நூற்றுக்கணக்கான பொதுமக்களும், வியாபாரிகளும், பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர்கள் ஈரோடு ஈ.வெ. ராமசாமி, புதுக்கோட்டை வல்லத்தரசு, நாராயணசாமி, வெங்கடாசலம், நகர முனிசிபல் வைஸ்சேர்மென் பெரியசாமி வெயிலு முத்துசாமி நாடார், சுகாதார ஆபிசர் கோபால கிருஷ்ண நாயுடு திருவண்ணாமலை, முத்து சம்பந்தம் ஆகியவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். காரியதரிசியால் அறிக்கை வாசிக்கப்பட்ட பின்னர், தோழர்கள் சங்கரலிங்கம், முத்துக்கருப்பையா பரமசிவம் ஆகியவர்கள் முறையே 'காலப்போக்கு,' 'தமிழும் பாரதியாரும்,' 'புதியசகாப்தமும் நாடார் வாலிபர்களும்' எனும் விஷயங்களைப்பற்றி நீண்டநேரம் பேசினார்கள். தலைவர் தம் முடிவுரையில் சங்கத்தார்கள் உறுதியுடன் நல்ல விஷயமொன்றை கைகொடுத்து சாதித்து நல்முடிவு செய்வதுடன் நகரின் முன்னேற்ற காரியத்தில் முழு கவனம் செலுத்தல் வேண்டுமென கோரிக்கொண்டார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 12 மணிக்குஇனிது முடிந்தது.

---

## விருதுநகரில் செந்திக்குமார் தர்பார்.

26-2-33 மாலை 4மணிக்கு விருதுநகர் முனிசிபல் ஆபீஸ் "ராஜ பில்டிங்கில்" தோழர் மு. சு. பெ செந்திக்குமார் அவர்களுக்கு "ராவ் சாகிப்" பட்டம் வழங்குவதற்காக இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் தோழர் ஜே. கிரே, ஓ. பி. இ. ஐ. சி. எஸ். தர்பார் ஒன்று நடத்தியது. கலெக்டருக்கு நல்வரவு அளிக்கப்பட்டதும், தர்பார் ஆரம்பமாயிற்று. தோழர் மு. சு. பெ செந்திக்குமார் அவர்கள் தொடர்ச்சியாக 6வருஷகாலம் ஸ்தல நகர பரிபாலனசபையில் அக்கிராசனராவும், 9வருஷகாலம் ராமனாதபுரம் ஜில்லாபோர்டில் அங்கத்தினராகவும், இன்னும் பல பொது ஸ்தாபனங்களில் தலைமை ஸ்தானமும் முக்கிய அங்கத்தினர் ஸ்தானமும் வகித்துநாடார்மஹாஜனங்களுக்கும், பொது ஜனங்களுக்கும் புரிந்துள்ள அரியசேவையும், செந்திக்குமார—மீனாக்ஷிஅம்மாள்முனிசிபல் பெண்பாடசாலைக் கட்டிடத்துக்கு நிலம் வாங்கிக்கொடுத்த வகையிலும், முனிசிபல் பிரசவ ஆஸ்பத்திரி ஒன்று கட்டுவதற்கு ரூபாய்5000நன்கொடைகொடுப்பதாக வாக்களித்துள்ள வகையிலும் அன்னவரின் தர்ம சிந்தனையையும் மிகவும் புகழ்ந்து பாராட்டிப் பேசியபின் தோழர் மு. சு. பெ. செந்திக்குமார் அவர்களுக்கு கலெக்டர் ராவ்சாகிப் பட்ட சன்னத்தை அளித்தார்.

(ஒரு நிருபர்)

# மகாமகம்.

(பகிஷ்காரசபை காரியதரிசி எழுதுவது)

இந்த மாச்சு மாதத்தில் குப்பகோணம் மகாமகம் நடைபெறுகிறது. 'பெற்றதாய் தட்டுபிச்சைவாங்கும்போது மகன் மகேஸ்வரபூஜை செய்வ'தென்றபழமொழியைப்போல் கும்பகோணம் மகாமகத்தின் சம்பவமும் இருக்கிறது. இந்தியாவில் எங்குபார்த்தாலும் பஞ்சம், பஞ்சம் என்றபேச்சாகவே இருக்கிறது. ஐயோ பசிக்கிறது. பிச்சாந்தியாகி என்ற சத்தமே எங்குபார்த்தாலும் கேட்கப்படுகிறது. ஜீவ்திசெலுத்துவதற்கு வழியில்லை கலம் நெல் 12-அணுவே விற்கிறது. மற்றதானிய விலைகளும் குறைந்து விட்டதால் நாட்டுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பணப்பஞ்சத்தை சொல்ல வேண்டியதில்லை. நாட்டின்நிலை இவ்விதமிருக்க ரயில்வே கம்பெனியும், கண்காக்ஷி சபைகளும் டிராமாக்களும், விபசாரிகளும், கும்பகோணம் மகாமகத்துக்கு நல்வரவு கூறிஅழைப்பதின் உள் ரகசியமென்ன? எல்லாம் காசுபறிக்கும் வித்தையே என்பதை சொல்லவேண்டியதில்லை. கும்பகோணம் மகாமகத்தில் கிடைக்கும் பாவபுண்ணியத்தைப் பற்றி, வெள்ளைக்காரனின் ரயில்வே கம்பெனிக்கும், டிராமாக்காரனுக்கும் கண்காக்ஷி சபைக்கும், விபசார விடுதிகளுக்கும், என்ன தெரியும்? ஏராளமான விபசாரிகள், விபசாரத் தொழில் புரிய கும்பகோணம் வந்து தினம், தினம் குமிகின்றார்களே! ரயில்வேக்காரர்கள் ஏராளமான விளம்பரம் செயகின்றார்களே! கண்காக்ஷி சபை மூலமாக (All India Exibition) இந்து பத்திராதிபர் உள்பட படித்த உலகஞானமறிந்த பிரபலஸ்தர் மகாமக உத்சவத்தை விளம்பரப் படுத்துகிறார்களே! இதெல்லாம் எதற்கு! மகாமகபக்தி மக்களுக்குப்புகட்ட ரயில் கம்பெனியும், கண்காக்ஷிசபை, டிராமாவும் விபசார விடுதி போன்றதரகர்களாவேண்டும்? ஆகவே எல்லாம் ஜனங்களின் கைப்பொருளை பறிப்பதற்கு செய்யப்படும் சூழ்ச்சிஎன அறிய வேண்டும் வருகிற வருகிற மாமகத்தைப்பொறுத்து ஜனங்கள் ஜாக்கிரதையாகவேண்டும். கும்பகோணத்துக்கு போகும்படி ஏற்படும் ரயில்வே சிப்பந்திகளுக்கும் போலீஸ் சிப்பந்திகளுக்கும் இப்போதிருந்தே (Vaesination) அம்மைகுத்துதல் (Anti cholera injection) காலராவினால் பீடிக்கப்படாமல் இருக்க வேண்டி ஊசி போட்டுக் கொள்ளுதல் (Anii Typhoyd and Malerial injection) டைபாய்ட், மலேரியா, முதலிய முறை காய்ச்சல்கள் வராமல் ஊசிபோட்டுக்கொள்ளுதல் முதலிய முன்னெச்சரிக்கையான சிகிச்சைகளை செய்து வருகிறார்கள். போலீஸ் சிப்பந்திகளுக்கும், ரயில்வேசிப்பந்திகளுக்கும் மகாமகத்து கிளப்புகளிலோ, வேறு தனிப்பட்ட இடங்களிலோ சாப்பாடு முதலியவைகள் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று கண்டிப்பான உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. மேல் கண்ட சிப்பந்திகளுடைய சாப்பாடு வசதிகள் எல்லாம் மகாமக கூட்டம் கூடும் கும்பகோணம் எல்லைக்கு வெளியில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் சென்ட்ரல் ஸ்டோரிலிருந்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. ரயில்வே கம்பெனியாரும் போலீஸ் சிப்பந்திகளும் தங்கள் சிப்பந்திகளுக்கு ஏன் இப்படி செய்கிறார்கள். என்பதை பொது ஜனங்களும் சிந்திக்கவேண்டும். மகாமகத்தில் கூடும் பல லக்ஷக்கணக்கான ஜனங்களால் கண்டிப்பாய் மேலே விவரிக்கப்பட்ட வியாதிகள் வந்துசேருமென்ற முடிவின் பேரிலேயேதான் தங்கள் சிப்பந்திகளுக்கு ஆரம்பசிகிச்சைகளை முன் ஜாக்கிரதையுடன் செய்கிறார்கள். என்பதை பொது ஜனங்கள் நன்கு அறியவேண்டும்.

மகாமகத்துக்குப்போவதால்கண்டிப்பாய் அம்மை, காலரா, டைபாய்ட், மலேரியா போன்ற வியாதிகள்வரும் என்பதை ரயில்வே கம்பெனியாரும் போலீசாரும்பூரணமாகஉணர்ந்துதங்கள்சிப்பந்திகளுக்கு முன்ஜாக்கிரதை செய்வதுபோல் இதர ஜனங்களை அம்மாதிரி கருதாமல் மகாமகத்துக்கு ஆசிகூறி அழைப்பது வருந்தத்தக்கதேயாகும். ரயில்வே கம்பெனியாருவது தங்கள் வருமானத்தையே குறியாகக்கொண்டு செய்கிறார்கள் என்று சொல்லலாம் போலீசும், கும்பகோணம்முனிசிபாலட்டிபோன்றவைகளும் இதன்உண்மையைபொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லாததை பார்க்கும்போது வருந்தாமலிருக்க முடியவில்லை. இந்த கூற்றுகளை உணர்ந்து கொண்டும், தெரிந்து கொண்டுமிருக்கிறபொதுஜன தலைவர்களும் மௌனம் சாதிப்பது ஆச்சரியமே யாகும். இவைகளை பொது ஜனங்கள் ஆழ்ந்த கருத்தோடு யோஜனை செய்து கும்பகோணத்துக்கு போவதில்லை என்று பிடிவாதமாக முடிவு செய்து கொள்ள வேண்டும். அப்படி போயித் தானுக வேண்டுமென்று முடிவு செய்கிறவர்கள் அம்மை, காலரா, போன்ற வியாதிகள் வராமல் படி போலீசாரும் ரயில்வே கம்பெனி சிப்பந்திகளும் செய்து கொள்வதேபோல் ஊசிபோட்டுக் கொண்டாகிலும் போகும்படி விண்ணப்பித்துக்கொள்கிறோம அதோடு கும்பகோணத்துக்கும் போகவேணுமாய் பிடிவாதங் கொள்கிற வர்களுக்கு தாழ்மையாக ஒன்றை தெரிவித்துக் கொள்கிறோம்! அதாவது:—

கடந்த மகாமகத்தில் எத்தனைபேர்கள் காதறுபட்டவர்கள், அடி உதை பட்டவர்கள், மூட்டை பறிகொடுத்தவர்கள், பெட்டி பறிகொடுத்தவர்கள், கழுத்துமணி பறிகொடுத்தவர்கள் என்பதைபோன மகாமகத்தின் போலீஸ் நிர்வாக அறிக்கையும், பார்ப்பதோடு கர்பத்தோடு கலங்கிய வர்களும், கைக்குழந்தைகளோடு நசுக்கப் பட்டவர்களும், மனைவி மக்களை விட்டு பிரிந்தவர்களுள் எத்தனை பேர்கள் என்பதையும் போய் வந்தவர்களை விசாரித்துப் பாருங்கள். அதோடு காலராவிலும்கூட்டத்திலும் இறந்தவர்கள்எத்தனைபேர்களுக்கு சர்க்கார் கொள்ளிவைக்கும்படி நேரிட்டதென்பதை விசாரியுங்கள். இவைகளை எல்லாம் நன்கு விசாரித்துக் கொண்டு போவதென்பதும், போவதில்லை யென்பதும் முடிவு செய்து கொள்ளுங்கள் வருவதைசொன்னேம்! கேட்டால்கேளுங்கள் இல்லாவிட்டால் விடுங்கள்.

கும்பகோணத்தின் மகாமக குளத்தின் நிலைமைவெளியூர் வாசிகளுக்கு தெரியாததே பலர் "மகாமகம்" என்றதும் வந்து விடுகிறார்கள் ஆகவே. அக்குளத்தின் நிலைமையையும் கொஞ்சம் சொல்லி விடுகிறேம். அக்குளத்தின் ஆபாசம் தெரிந்தாலே ஒருவரும் போக மாட்டார்கள்! போகவும் மனம் சகிக்காது.

கும்பகோணத்தை சேர்ந்தசுற்றுபிரதேசங்களில் இருப்பவர்கள் அக்குளத்தை எப்போதும் எறெடுத்துக் கூட பார்க்க மாட்டார்கள். அக்குளத்தை பார்த்தாலே வாந்தி எடுக்க நேரிடும் உள்ளூர் குடும்பஸ்தர்களும், சுகாதார முறை தெரிந்தவர்களும் மகா மக குளத்தில் மலபாதைக் குப்போனுல் காலைக்கூட கழுவுவது கிடையாது. மகா மகுளத்தைச் சுற்றிய நாலுவீதிகளிலும் உள்ள கிளப்புகள் வீடுகள் இவைகளிலிருந்து விழும் எச்சிலைகள் சதா சர்வகாலமும் அக்குளத்தில் மிதந்து கொண்டிருக்கும் சுருங்கச்சொன்னுல் அக்குளத்தை கும்பகோணம் குப்பைத்தொட்டி என்றுசொல்வதுதான் சாலவும் பொருந்தும்!

ஆகவே இந்த உண்மைகளை நன்கு பரிசீலனை செய்து நடந்து கொள்ள வேண்டுமாய் பொதுஜனங்களுக்குவிண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

# ஈரோட்டில் குச்சிக்காரிகள் தொல்லை.

ஈரோட்டில் குச்சிக்காரிகள் தொல்லை அதிகரித்து விட்டதென்றும் இதன் பயனாய் காலித்தனங்களும், பொதுஜன சுவதானத்துக்கு அசௌகரியங்களும் ஏற்பட்டு பல திருட்டு, ரகளை, அடிதடி, ஆபாசப் பேச்சுவார்த்தைகள் முதலியவைகளும் ஏற்படுகின்றன என்று 29-1-33 தேதி "குடி அரசு"ப் பத்திரிகையில் எழுதியிருந்ததுடன் இவற்றைச் சீக்கிரத்தில் ஒழிக்க போலீசார் தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், விபசாரத் தடுப்பு சட்டத்தின் அமுல் ஈரோட்டிற்கும் கொண்டுவர வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டோம்.

சமீபத்தில் ஈரோடு போலீசு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் சிறிது கவலை கொண்டு ஏதோ சில எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதாகவும் தெரிகின்றது. ஆனால் காரியத்தில் தக்க மாறுதல்கள் எதுவும் ஏற்பட்டதாய் தெரியவில்லை.

ஆகையால் இப்போதும் பல தோழர்கள் முயற்சி எடுத்து போலீசு சூப்ரண்டெண்ட் அவர்களுக்கு இக்கஷ்டங்களைக் குறித்து விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகத்தெரிகின்றது. அதில் தோழர்கள், மு. ச. முத்துக்கருப்பஞ் செட்டியார், ஆர். பழனியப்ப செட்டிட்டியார். ஈ. என். குப்புசாமி ஆச்சாரி, எ. கோவிந்தசாமி நாயக்கர், எஸ். வேலுச்சாமி, சுப்பிரமணியம், ஈஸ்வரன், செலமேலு, நாதன், ரத்தினசபாபதி முதலிய பலர் கையெழுத்திட்டு விண்ணப்பம் செய்துகொண்டதாகத்தெரிகின்றது.

ஆதலால் இனியாவது உடனே போலீசு இலாக்காதாரர்களும், முனிசிபாலிடியாரும் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

முனிசிபல் கவுன்சில் மூலம் ஈரோட்டிற்கு விபசாரத்தடைச் சட்டம் அமுலுக்கு வரவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்ப வேண்டும் என்றும் விரும்புகின்றோம்.

ஈரோட்டில் சற்றுஏறக்குறைய 300 பேர்களுக்குக் குறையாமல் 500க்கு மேற்படாத பெண்கள் பணத்துக்கு விபசாரம்செய்கின்ற கீழ்தரவிபசாரிகளாக இருப்பதாக தகவல் எட்டுகின்றது. சில வீதிகளில் மரியாதையான மக்கள் வாழ்வதற்கு யோக்கியதையே இல்லாமல் இருந்து வருகின்றது. ஆகையால் இதைஉடனேகவனிக்கவேண்டுமென்று விரும்புகின்றோம்.

## தென்னிந்தியாவில் காங்கிரஸ் யோக்கியதை.

"சர்ச்லைட்"

பணம் வசூல் செய்தும் பணம் வசூல் செய்துகொள்ள அதிகாரம் கொடுத்தும் மற்றபடி கதர் இலாக்கா முதலியவைகளின் பேரால் சம்பளம் கொடுத்தும் தன் தொண்டர்களை வைத்து வியாபாரம் போல் காங்கிரஸ் பிரசாரம் செய்யப்படுகின்றது. ஏதோ சிலர் வீட்டுக்கடங்காத நிலையில் உள்ளவர்களும் மற்றும் இதை ஜீவனத்துக்குஒருவழியாக உபயோகித்துக்கொள்ளவோ தற்கால சாந்தியாய் ஏதாவது ஒன்று இருக்கட்டும் என்று கருதுகிறவர்களோ அல்லது தங்கள் தொழில் முறைக்கு காங்கிரசின் மூலம் விளம்பரம் கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையும் ஆசையும்கொண்டவர்களே தான்பெரிதும் பிரசாரக்காரரும்தலைவர்களுமாய் இருக்கிறார்கள். இது இப்படி இருந்தாலும் பொதுக்கூட்டங்களினுடைய யோக்கியதையோ அல்லது தென்னாட்டு காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களுக்கு பொதுக்கூட்டங்களில் உள்ளமதிப்போ கூட்டங்களில் ஆஜர் இருந்து பார்ப்பவர்களுக்கே விளங்கும். அதென்னவென்றால் தோழர் சி. ராஜகோபாலாச்சாரி முதலிய எப்படிப்பட்ட தலைவர் என்றாலும் இப்போது தமிழ் நாட்டில் பிரசங்கமேடையும் இல்லை பிரசங்கம் கேள்க ஆள்களும்இல்லை இதை உணர்ந்தே வடநாட்டில் இருக்கின்றவர்கள் யாருக்காவது விளம்பரம்கொடுத்து அவர்களை அழைத்துவந்துகூட்டம்போட்டாலொழிய கூட்டம்நடத்தவேமுடியாமலிருக்கிறது ஓர் அத்தாட்சியாகும்.

## சுயமரியாதை மணம்.

நாகர்கோவில் அட்வகேட் தோழர் பி. சிதம்பரம பி. ஏ. பி. எல். அவர்களுடைய சகோதரர் தோழர் அ. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சி அம்மாளும், திருநெல்வேலி தோழர் த. மு. கு. நமசிவாயம்பிள்ளை அவர்கள் தம்பி தோழர் கு. காந்திமதி நாதனும், 9-2-33 வியாழக்கிழமை இரவு 7-30 மணிக்கு ராமவர்மபுரத்தில் தோழர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல். அவர்கள் வீட்டின் முன்பு அமைக்கப் பட்டிருந்த பந்தலில் சுயமரிதை முறைப்படி எத்தகைய சடங்குமில்லாமல் மணஞ்செய்து கொண்டனர். வக்கீல்கள், உத்யோகஸ்தர்கள், வியாபாரிகள் பிரபலஸ்தர்கள் உள்பட ஏராளமான பேர் வந்திருந்து வைபவத்தைச் சிறப்பித்தார்கள். தாலி கட்டு அறவே நீக்கப்படடு மலர் மாலை மாற்றுவதோடு மணம் முடிவு பெற்றது தோழர்கள் எல். பூதலிங்கம், இ. ராமையா, என். எஸ். ஆர். சுபபிரமணியம் (முனிசிப்பல் கவுன்ஷிலர்) ஆர். ராமலிங்கம், டி. எம். சிதம்பரதாணுபிள்ளை பி. ஏ. பி. எல். ஆகியோர் இம்மாதிரி மணம் நிகழ்த்துவதின் சிறப்புகளை பேசினார்கள். மண மக்களிருவரும் திருநெல்வேலி சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்தவர்கள். இருவருடைய தீரத்தையும் பாராட்டி நாகர்கோவில் சுயமரியாதை சங்கத்தார் வாழ்த்துப்பா பாடிக் கொடுத்தனர். சமபந்தி போஜனத்துடன் மணம் முடிந்தது.

## ஈரோடு தாலூகா போர்டு தலைவர் தேர்தல்.

டை தேர்தல் 3-3-33 தேதி பகல் 2-மணிக்கு நடந்ததில் தோழர் ஆ. எஸ். ராஜாக்கவுண்டர் அவர்களுக்கு 12 ஓட்டும் சி. எஸ். சென்னியப்பகவுண்டருக்கு 9 ஓட்டும் கிடைத்ததால் தோழர் ராஜாக்கவுண்டரவர்கள் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

### தலைவர் தேர்தல் ஆக்ஷேபனை.

மேற்கண்ட தேர்தலை ஆக்ஷேபித்து ஈரோடு முனிசிப் கோர்ட்டில் ஆக்ஷேபனை மனுக்கொடுக்கப்பட்டிருக்கிறதாய் தெரிகிறது.

காரணம்:-தோழர் ராஜாக்கவுண்டருக்கு ஓட்டு செய்த 12 பேர்களில் தலைமை வகித்தவர் தவிர 11 பேர்கள் வெளிப்படையாய் ஓட்டு செய்தார்கள் என்றும் எதிர் ஆக்ஷேபகர் கொடுத்த ஆக்ஷேபனை விண்ணப்பங்களின் பேரில் மீட்டிங் தலைவர் தோழர் ராஜாக்கவுண்டருக்கு அனுகூலமாய் உத்திரவு போட்டு வெளிப்படையாகவே ஓட்டு செய்ய அனுமதித்து அவ்வோட்டுகளை கணக்கில் சேர்த்தது தவறு என்றும் ரகசிய ஓட்டுகளில் தானே அதிகம் ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும் தன்னையே தலைவராக ஒப்புக்கொண்டு தீர்மானிக்கவேண்டுமென்றும் கண்டிருக்கிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சென்னை சுயமரியாதை சங்கம்.

### பெரம்பூர் பாரக்ஸ்.

25-2-33 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை, புரசை, பொன்னன் வீதி தோழர் குப்புசாமி அவர்கள் இல்லத்தின் மேன் மாடியில் தோழர் எ. சித்திரை அவர்களின் தலைமையில் சங்கத்தின் கூட்டம் நடைப் பெற்றது. அது சமயம் தோழர்கள் எல். வில்லியம், பி. எஸ். மணி, ஆர். பி. ஏழுமலை, ஆர். பெருமாள், டி. தாந்தோணிஆகியவர்களால் முறையே "சமதர்மம்," 'ரஷியாவின் முன்னேற்றம்' "சங்கங்களின் கடமை நகரங்களில் தாழ்த்தப்பட்டோரின் பரிதாப நிலைமை" என்பவைகளைபற்றி பேசப்பட்டு சங்கத்தின்காரியதரிசி தோழர் வி. இன்னியாசி முத்துஅவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 6-மணிக்கு கூட்டம் முடிவடைந்தது.

(ஒரு நிருபர்)

## காலஞ்சென்றார்.

சுயமரியாதை இயக்கத்தோழர் நாகை என். பி. காளியப்பன் அவர்களின் தாயார் 23-2-33-ல்படப்பக்காடு என்ற ஊரில் காலஞ்சென்றார்.

## மதுரை சுயமரியாதைத் தொண்டர்படை.

### அனுதாபக்கூட்டம்.

மதுரை சுயமரியாதைச் சங்க ஹாலில் மதுரை சுயமரியாதைத் தொண்டர் படையாரின் ஆதரவில் சிவகங்கை தோழர் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்கள் காலஞ் சென்றமைக்காக 27-2-33 தேதி ஒரு அனுதாபக்கூட்டம் தொண்டர் படைத்தலைவர் தோழர் எஸ் வி. ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது. அதாவது:-

"தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் காலமானதற்காக மதுரை சுயமரியாதைத் தொண்டர் படையானது அவர் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிக்கிறது" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியபின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

### சிவகங்கை திராவிட சங்கம்.

சிவகங்கை திராவிட சங்கத்தின் ஆதரவில் கூடிய பொதுக்கூட்டத்தில் 27-2-33 தேதி கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"சிவகங்கை, பிரபல சீர்திருத்தக்காரரும், சமூக ஊழியருமான தோழர் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல், அவர்களது அகால மரணத்திற்கு இந்நகர் மகா ஜனங்கள் வருந்துவதோடு தங்கள் ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது"

## சுயமரியாதை தோழர்கள் சுற்றுப்பிரயாணம்.

சென்ற வாரம் "குடிஅரசு"ல்அறிவித்திருந்த படி வேலூர் ஆரணி, இவ்விரண்டு இடங்கட்கு மட்டும் செல்ல முடியாமல் ஒத்திவைக்கப் பட்டது. மற்ற நிகழ்ச்சிகள் முறையே நடை பெற்றது. என்று தோழர் அ. பொன்னம்பலம் அறிவிக்கிறார்.

## ஜெயசௌந்திர பாண்டியன்.

தேனி சுயமரியாதை வீரர் தோழர் மாரியப்பன் அவர்களுக்கு 10-2-33ல் பிறந்த ஆண் குழந்தைக்கு "ஜெயசௌந்திர பாண்டியன்" என பெயரிடப் பட்டது.

(ஒரு நிருபர்)

## அடுத்த வாரம்.

தோழர் ஈ. வெ. ராமசாமி, எஸ். வல்லத்தரசு ஆகிய இவர்களுக்கு விருதுநகரில் அளித்த வரவேற்புப்பத்திரங்களும் அதற்கு அவர்கள் அளித்த பதிலும், பொதுக்கூட்ட சொற்பொழிவுகளும் அடுத்தவாரம் வரும்.

## திருவிசநல்லூர்.

### சுயமரியாதைக்கூட்டம்.

கும்பகோணம் தாலூக்கா திருவிசநல்லூர் முகாசக பண்டார கிராமத்தில் 23-2-33ந்தேதி மாலை ஒரு கூட்டம் கூடியது. டை கூட்டத்திற்கு தோழர் சிவராமன் அவர்கள் தலைமை வகித்தார்கள். பிறகு தோழர் டி பி. நாராயணசாமி அவர்கள் "நமது கிராமம்இப்பொழுது இருக்கும் நிலைமை" என்பதுபற்றி பேசியபின் கூட்டம் கலைந்தது.

## பேரளம்.

19-2-33 மாலை 6மணிக்கு மாயவரம் தோழர் எம் கல்யாண சுந்தரம் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு சுயமரியாதைச்சங்கம் நிறுவப்பட்டது தலைவர் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும், மாமாங்க பகிஷ்காரவிஷயத்தைப்பற்றியும், பேசியபின் கூட்டம் கலைந்தது.

## பெருவளநல்லூர்.

### சேரிக்கூட்டம்.

26-2-33இரவு 8மணிக்கு இவ்வூர் கிராம சுயமரியாதைச் சங்கத்தாரால் சேரியின்கண் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமயம், பூவாளூர் தோழர் எஸ். செல்லப்பா அவர்கள் தலைமைதாங்கினர் கூட்டத்திற்கு சுமார் இருநூற்றிற்கதிக மக்கள் கூடியிருந்தனர். ஆதிதிராவிடமக்கள் அதிகம் வந்திருந்தது குறிக்கத்தக்கது. தோழர்களான, பி. எ பழனியப்பா, பி. எம். நாராயணசாமி ஆகியவர்கள் முறையே "சமதர்மம்" புரட்சியியல், பொதுவுடைமை முதலிய பொருள் பற்றி விரிவுரையாற்றினர். இறுதியில், கூட்டம் 9மணிக்கு இனிது முடிந்ததெனகாரியதரிசி தெரிவிக்கிறார்.

## பூவாளூர்.

### பொதுக்கூட்டம்.

இன்று 21-2-33 இரவு 7மணிக்கு ஆண்பாடசாலை முன்பாகக்கூடப்பட்டது. மாமாங்கப்பகிஷ்கார கமிட்டியார் அறிக்கையின் பேரில் கூடப் பட்ட இக்கூட்டத்திற்கு தோழர் பி. எ. பழனியப்பா தலைமை வகித்தார்கள் முறையே, 'மாமாங்கம்" "சமதர்மம்" முதலிய பொருள் பற்றி தோழர்களான செல்லப்பா, கூத்தப்பெருமான் முதலியோர் சொற்பெருக்கிட்டார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

(7ம் பக்கத்தொடர்ச்சி)

சிவபெருமான் எழுந்திகளான பெண்கள் தங்கள் குருஸ்தானம், புரோகிதன், ஆச்சாரி, அர்ச்சகன், தம்பிரான்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், சாஸ்திரிகள், பண்டிதர்கள், மகாஜனங்கள் இத்தனை பேர்களுடைய பாவங்களையும் தீர்க்கும் மகாமகக்குளத்திற்கு அதிலுள்ள காலரா, மலேரியா, ஆனைக்கால் முதலிய க்ருமிகளின் பாவத்தைத் தீர்க்க சக்தியில்லாமல் ஆஸ்பத்திரி சொர்தகம் தீர்க்கிறதென்றால் மனித பாவத்தைத்தீர்க்கும் தீர்த்த சக்தி சத்தியமா? மனிதனின் உயிரை வாங்கும் கிருமிகளின் உயிரைப் போக்கும் கெந்தக சக்தி சத்தியமா? நம்பிக்கை அதர்மத்தையும் நியாய ஈனத்தையும் சகிக்கவேண்டுமென்பது சத்தியமாகாது? இந்த சத்தியத்தை நீங்கள் இனி உபதேசிக்காதீர்கள். அசத்தியமானவைகளுக்கு யாத்திரை போவதாகச் சொல்லி சமூகங்களையும் அசத்தியத்தின் வழி செலுத்தாதீர்கள்.

அவ்வழியை ஞான ஒழுக்கம், கர்மநிச்சயம், பக்திவழி, பக்குவப்படி அவாளவாள் இவாளிவாள் தருமம், அம்பாள் கடாட்சம், சிவப்பிராப்தி, விஷ்ணு வியாபகம், பிரம்மமயம், மாயாசம்பந்தம், ஆத்மசைதன்னியம் என்று பலவாராக அர்த்தமில்லாமல், அர்த்தமாகாமல் குழப்பிச்சொல்லுகிறீர்கள். குருவென்ற பெரிய பேரினாலும், உங்கள் சிஷ்ய பார்ப்பனர்களின் வாபத்தாலும் ஆடம்பரத்தாலும் எற்பாட்டாலும் 'சுதேசமித்திரனி'ன் பிரசாரத்தாலும் பிராமணர்களின் தாசிமக்களான சி. வே. சுப்பிரமணிய முதலியாரைப்போன்ற சூத்திர அடிமைகளின் அடிமைப்புத்தியினாலும், அறிவின் திறமையில்லாததினாலும், ஆலோசனையில்லாமல் சொன்னதைக்கேட்டு வந்த பழக்கத்தாலும், எப்படியோ போகட்டுமென்கிற அலட்சியத்தாலும் உங்கள் உபதேசமொழி உலாவிவந்தாலும் அந்த இருட்டுக்குகைதந்திரத்தில் ஒளியில்லை, நீதியில்லை, சத்தியமில்லை, சமயத்தில் மிகச்சிறந்த சத்தியத்தையும், உண்மையையும் மண்ணுக்குள்ளே எத்தனை நாள் புதைத்து வைக்க முடியும்? அவற்றினின்றெழக்கூடிய பிசாசுகளை தூங்கப்பண்ணுதல் கஷ்டமென்பதை நீங்கள் உணரவில்லையே. தங்களின் அடுத்த நீதிவாக்கியங்களைப்பற்றி பின்னால் தெரியப்படுத்துகிறேன்.

## எழும்பூரில் சுயமரியாதைச்சங்கம்.

1-3-33 தேதி ஷை சங்கக் கட்டடத்தில் மாதாந்திரக் கூட்டம் தோழர் வி. பி. எஸ். மணியர் தலைமையில் கூடிற்று. தோழர் ஐ. ஆரோக்கிய சாமி சுயமரியாதை கீதம்பாடினார்.

தலைவர் முகவுரைக்குப்பின் வரதராஜபுரம் சுயமரியாதைச் சங்கத்தோழர் சாமிநாதம் கோவில் ஸ்தலமென்பதைக் கண்டித்துப் பேசினார். பிறகு பெரம்பூர் பாரக்ஸ் சுயமரியாதைச் சங்கத் தலைவர் தோழர் சி. ஐ. முத்து சி. ஆர். எ. வாசகம் ஆகிய கத்தோலிக்கத் தோழர்கள் அம்மதக் குருக்கள்களின் புரட்டுகளை அனுபவபூர்வமாக எடுத்துச் சொன்னார்கள். தலைவர் முடிவுரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுயமரியாதை இயக்கத்தாலும் தோழர் ஈ. வெ. ராமசாமியாலும் தான் பயன் உண்டே தவிர வேறு எவ்விதத்தாலும் விடுதலை இல்லை என்றுபேசிவாழ்த்தினார் என ஷை சங்கக்காரியதரிசி எம். ராஜு எழுதுகிறார்.

## துடுப்பதி.
### செங்குந்தவாலிபர் சங்கம்.

ஷை சங்க 4-வது ஆண்டு விழா சென்னிமலை யூனியன் ; போர்டு மாஜி பிரசிடெண்ட் தோழர் எஸ். கே. இராமசாமி அவர்கள் தலைமையில் 21-2-33-ந்தேதி காலை நடந்தது. விழாவுக்கு அப்பிச்சிமார்மடாதிபதி தோழர் ஆண்டமுத்துகவுண்டர் சி, பி. சுப்பையா முதலிய சுமார் 300 கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். தோழர் ஈ. பி. வெங்கிடாசலம் அறிக்கை வாசித்ததும், தலைவர் தலைமை உபன்யாசம் செய்தபின் சாப்பாடு நடந்தது. பிறகு 3-மணிக்கு கூடியதும் தோழர் சி. பி. சுப்பையாவுக்கு ஒரு உபசாரப்பத்திரம்வாசித்தளிக்கப்பட்டது. செங்குந்தர் 20-வது மகாநாட்டுடன் வாலிபமகாநாடு கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## S. R. L.
### சமூக சீர்திருத்த சங்கம் பள்ளிகொண்டா.

சென்ற 28—2—33-ல் தோழர் எம். கி. ரத்தினம் தலைமையில் கூட்டமொன்று கூடியது. அவ்வமயம் தோழர் ஈ. எஸ். மணி அவர்கள் ஷை யூருக்கு ஓர் சங்கம் கூட்டவேண்டுமெனக்கேட்டுக்கொண்டார் யாவரும் அதை ஆமோதித்து சமூக சீர்திருத்த சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## திருத்துறைப்பூண்டி.

ஆதிதிராவிட முன்னேற்ற சங்க மீட்டிங் ஒன்று 26-2-33-ந்தேதி தோழர் ஏ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்தது தோழர் உத்திராபதி 'பழக்கவழக்கம் பண்டிகை' என்பதைக் கண்டித்து 1-மணி நேரம் பேசினார். தோழர் அய்யாசாமி 'கல்வி' யைப்பற்றி பேசினார் தலைவர் 'முன்னேற்றம்' என்பதுபற்றி பேசினார்.

(ஒரு நிருபர்)

# மதிப்புரைகள்.

## "தமிழ்க்கடல்."

தமிழ்க்கடல் என்னும் மாத சஞ்சிகையின் முதல்இதழ்வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் தோழர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களாகும். பண்டைப்பெருமையையும், தமிழின் தொன்மையையமட்டும் பேசி வெறும் புராண காலக்ஷேபம் செய்துவறிதே காலங்கடத்தி மகிழும் பண்டிதர்களே போலல்லாது சீர்திருத்த அவாவும், விரிந்த எண்ணமும், பரந்த நோக்கமும், பகுத்தறிவுணர்ச்சியும் போக்குக்குத்தக்கவாறு தம்மைப்பண்படுத்தி கொள்ள ஆர்வமும் உண்மையான, உருவான, வேலைகளில் கண்ணும் கருத்துமுள்ள ஓர் சிறந்த தமிழறிஞர் என்றே கருதி தோழர் கா. நமச்சிவாயமுதலியார் அவர்களை மதித்து வருகிறோம். பல்வேறு அன்னியபாஷைகளிலுள்ள விஞ்ஞான அறிவு சாஸ்திரங்கள் நம்மொழியில் இல்லாமையாலேயே தமிழர் அவைகளைக்கற்கவும், அதன் பயனை அனுபவிக்கவும் இயலாது தவிக்கின்றனர். ஆனால்இத்தகையபெருங்குறையை நிவர்த்திப்பான் வேண்டி தோழர் நமச்சிவாய முதலியாரால் வெளியிடப்படும் இம்மாத சஞ்சிகையைப்பார்த்த அளவில் பூமிசாஸ்திரம், வானசாஸ்திரம், பௌதீகரசாசாஸ்திர ஆராய்ச்சிக்கட்டுரைகள் வெளியிடத்துணிந்ததைப் பாராட்டுகிறோம். இவ்வெளியீட்டில் பூமி, மரங்கள் இவைகளைப்பற்றிய கட்டுரைகள் இயற்கையையும், பகுத்தறிவையும் ஆதாரமாய் கொண்டு படங்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளது. நீலகிரி மலைக்கு அப்பெயர் வந்ததின் காரணமும், அம்மலைவனமும், சிறப்பும் அங்கு வசிக்கும் ஜனங்களைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுவதோடு திராவிட மொழிகளின் தொகுதி, என்ற மொழிவளர்ச்சியைக் கருதிய கட்டுரையும், தொண்டைமண்டலம் என்ற கட்டுரையும் காணப்படுகிறது. நவீன முறையில் ஆரம்பிக்கப்பட்ட இத்தகையதோர்பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது தமிழர் ஒவ்வொருவரது கடமையாகும்.

வருட சந்தா ரூ2—0—0

விலாசம்.

"தமிழ்க்கடல்" ஆபீஸ்
சாந்தோம், மயிலை.

## சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய நடை விலை அணா, 0—4—0.

விலாசம்:—
குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

## இந்து தேச சரித்திரச் சிந்து.

இப் புத்தகம் தூத்துக்குடி காரப்பேட்டை நாடார் ஆண்பாடசாலை ஆசிரியர் பால். எதல்பட்கோனார் அவர்களால் இயற்றப் பட்டது. இதில் இந்திய தேசத்தின் எல்லைகள், பூர்வீக குடிகள். ஆங்கில ஆட்சி முதலியன பற்றிய இந்து தேச சரித்திரச் சுருக்கப் பாடல் ரூபமாக ஆக்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகளுக்கு உபயோகமானது. இதன் விலை அணா -4 வேண்டுவோர் ஆசிரியருக்கே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## கும்மி கோலாட்டம்.

சுகாதார கும்மி கோலாட்டம் என்ற இப் புத்தகமும் ஷை யாராலேயே இயற்றப்பட்டது. இதில் பிளேக், காலரா முதலிய தொத்து நோய்களும், கண்நோய், நரப்புச் சிலந்தி முதலியன உண்டாகும் விதமும், அவைகளைத் தடுக்கும் முறைகளும், பாடல் ரூபமாயும் வசன ரூபமாயும் விளக்கப் பட்டிருக்கிறது. சுகாதார வாரங்களில் உபயோகிக்க மாணவ மாணவிகளுக்கு உபயோகமானது. இதன் விலை அரையணா. ஆசிரியரிடமே பெற்றுக் கொள்ளலாம்.

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

விலை ரூ. 2. (தபால் சார்ஜ் வேறு)

3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொள்ளலாம். தொழில் முறையில் தேர்ச்சி பெறத்தகுந்த சமயம். எம்மிடம் கிடைக்கும்.

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

# சென்னைக் கடற்கரையில் சுயமரியாதைக் கூட்டம்.

## சங்கராச்சாரிக்கு சென்னையில் மடமா? சுயமரியாதைத் தோழர்கள் சொற்பொழிவு.

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் 26-2-33-ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு ஒரு சுயமரியாதைப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். அக்கூட்டத்திற்கு தலைவராக தோழர் வி. பி. எஸ். மணியர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று தலைவர் முன்னுரை கூறியமர்ந்தார்.

பின்னர் பூவாளூர் தோழர் அ பொன்னம்பலம் அவர்கள் "சுயமரியாதை இயக்கம், என்ன சொல்கிறது?" என்ற தலைப்பில் ஜாதிவேற்றுமை, மதச்சண்டை, சமயச்சண்டை, சங்கராச்சாரியின் பகற்கொள்ளை, கும்பகோணம் மகாமகப் புரட்டு, காந்தியின் வர்ணாச்சிரமநாடகம், தேசியத்தின் பெயரால் செய்யும் பார்ப்பன மதப்பிரசாரம், அடிமை இந்தியாவின் வறுமை நிலை, வீர வாலிபர்களின் கடமை என்ன? சமதர்மத்திட்டமே மக்கட்கு பேரின்பமூட்டும், உலகப்புரட்சியை தடுக்க யாரால் முடியும்? தனிவுடமையொழிந்து பொதுவுடமை நிலவுதலே அறிஞர்கள் விரும்பும் விடுதலையாகும். என்பது பற்றியும், சென்னை இரண்டாவது சுயமரியாதை மகாநாடானது 5—3—33ல் சென்னையில் நடைபெறப் போகிறது. எல்லாத் தோழர்களும் தவராமல் வாருங்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை நன்கு ஆலோசியுங்கள். அதுசரி யெனப்பட்டால் உலகத்தொழிலாளர்களுடன் ஒன்று சேர்ந்து பொதுவுடமைப்புரட்சிக்குத் தயாராகுங்கள். என்று மிக விளக்கமாகவும் விரிவாகவும் சுமார் 2மணிவரை பேசியமர்ந்தார்.

அதன் பின்னர், புதுக்கோட்டை தோழர் முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கள் கீழ் கண்டதீர்மானத்தைப் பிரரேபித்து மிகவிளக்கமாகவும், விரிவாகவும் பேசியமர்ந்தார். தீர்மானம் வருமாறு:—

"சென்னை நகரசபைக்குச் சொந்தமான காலியிடம் ஒன்றை சங்கராச்சாரி அவர்கட்கு மடங்கட்டுவதற்காக இலவசமாக (தர்மமாக) கொடுக்கும்படி சென்னை நகர சபைத்தலைவர் குமாரராஜா எ. முத்தையா செட்டியாரவர்கட்கு மகஜர் அனுப்பி ரகசியமாக சிபார்சு செய்யப்படுவதாகத் தெரிகின்றது. சென்னை நகரசபையின் பொதுயிடத்தை எக்காரணம் கொண்டும் ஊரை ஏமாற்றித்திரியும் பகற்கொள்ளைக் கூட்டபார்ப்பனத் தலைவர் சங்கராச்சாரிக்கு மடம் கட்ட (சோம்பேரிகள் தங்க) இடங்கொடுக்கக்கூடாது" என்று இப்பொதுக் கூட்டம் சென்னை நகரசபைத்தலைவர் அவர்களையும், சென்னை நகரசபை கமிஷனர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானத்தை எல்லோரும் ஏகமனதாக ஆமோதித்து தங்கள் அபிப்பிராயத்தை கரகோஷ மூலம் தெரிவித்தார்கள். வேறு யாருக்காகிலும் இத்தீர்மானம் நிறைவேற்றுவதில் ஆட்சேபனையுண்டா? என்று கேட்கப்பட்டது. எவருமில்லை யென்று பதில் கூறப்பட்டது. பின் தீர்மானம் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. தலைவர் இறுதியாக முடிவுரை கூறினார். இரவு 8-30மணிக்குக் கூட்டம் இனிது முடிய எல்லோரும் மகிழ்ச்சியுடன் கலைந்து போனார்கள்.

---

### பட்டுக்கோட்டை பனகாலரசர் வாசகசாலை.

பட்டுக்கோட்டை பனகாலரசர் வாசகசாலையின் கூட்டம் 21-2-33 செவ்வாய்க்கிழமை இரவு 8-30மணிக்கு உபதலைவர் எஸ். அருணாசலம் அவர்கள் தலைமையில் வாராந்திரக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தலைவர் முகவுரையில் "வாலிபர் முன்னேற்றம்" என்பது பற்றி நீண்டநேரம் சொற்பொழிவு ஆற்றினார். பின் தோழர்கள் ஜி ரெங்கசாமி, மயில் வாகனனார், காதர் எஸ். நடராஜன் முதலியவர்கள் அதைப்பின்பற்றிப்பேசினார்கள். தோழர் ஆத்துமலாம் அவர்கள் "மதமும் அதன் பயனும்" என்பது பற்றிப்பேசினார். தோழர்கள் கே. வடிவேல், கே. அருணாசலம் முதலியவர்கள் "தற்காலகல்வியும் அதன் பயனும்" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். தோழர்கள் கே. எல். எஸ். கிருஷ்ணன் வி. ஜெயராமன் முதலியவர்கள் வைத்தியம் என்பது பற்றி பேசிமுடித்தனர். இறுதியில் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 11மணிக்கு முடிவுற்றது

னை காரியதரிசி எழுதுகிறார்.

### சுயமரியாதைக்கூட்டம்.

13-1-33 மாலை 4 மணிக்கு பரூர் வாலிப சுயமரியாதைச்சங்கம் மாதாந்திரக்கூட்டம் கூடிற்று. பி. எஸ். தங்கராஜன் அவர்களால் சுயமரியாதைக்கீதம் பாடப்பெற்றது. எம். நடேசன் அவர்கள் தலைமை வகித்தார் தலைவர் நாட்டிற்கு "வேண்டிய கல்வி எது என்பதுபற்றி விரிவாகப் பேசினார். சங்கக்காரியதரிசி பி. எஸ் வெங்கடாசலம், பி. எஸ் தங்கராஜன், ஆகியவர்கள் பல விஷயங்களைப்பற்றிப்பேசினார்கள். பிறகு கீதங்கள் பாடப்பெற்று தலைவர் முடிவுரை கூறப்பட்டு கூட்டம் இரவு 8-30மணிக்கு முடிந்தது. (ஒரு நிருபர்)

---

### டாக்டர் நாயர் வாசகசாலை, புதியகட்டிட திறப்புவிழா.

#### மகாமக பகிஷ்காரம்.

திருச்சி வரகநேரி பெரியபாளையத்தில் 19-2-33 மாலை 5-30மணிக்கு புதியதாககட்டப்பட்ட டாக்டர் டி. எம் நாயர் வாசகசாலையை தோழர் எஸ். நீலாவதியம்மையார் திறந்து வைத்து டாக்டர் நாயர் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் செய்த சேவையைப்பற்றியும், பார்ப்பனரல்லாதாரியக்கத்தை தோற்றுவித்து பொதுமக்களுக்கு தொண்டு செய்ததைப்பற்றியும் விரிவாகப்பேசினார்கள். பின்னர், தோழர் ராமசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தோழர்களான பி. சிவபிச்சை, ராஜமாணிக்கம், எஸ். எஸ். ராயப்பன், சன்னாசி, ராவணதாஸ் ஆகியவர்கள் தீண்டாமை ஒழித்தல், மூட நம்பிக்கை ஒழித்தல் முதலிய விஷயங்களைப்பற்றி பேசினார்கள். பின்பு "பொதுமக்கள் மகாமகத்துக்கு ஏமாந்து செல்லாமல் மகாமகத்தை பகிஷ்கரிக்கிறதென இக்கூட்டம் ஏகமனதாக தீர்மானிக்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின்பு வந்தனங் கூறப்பட்டு இரவு 9-30மணிக்கு இனிது முடிந்தது.

#### மற்றொரு கூட்டம்.

திருச்சி வரகனேரி அந்தோனிசாமி கோவில் முன்னதாக உள்ள மைதானத்தில் இந்து கிறிஸ்தவ தாழ்த்தப்பட்டோரின் பொதுக்கூட்டம் 24-2-33வெள்ளியன்று மாலை 6மணிக்கு தோழர் எஸ். நீலாவதி அம்மையார் தலைமையின் கீழ்கூடியது. ஏராளமான ஆண் பெண்கள் கூடியிருந்தார்கள் தலைவர் முகவுரைக்குப்பின்பு "இந்துக்கள் கும்பகோணம் மாமாங்கத்தை பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும்" தியாகராயர் வாசகசாலையார் முயற்சியால் பணம்சேகரித்து கல்லறை வண்டி ஒன்று செய்வதென்றும் கூட்டத்தாரால் தீர்மானிக்கப்பட்டது. பின்பு தோழர்களான ராமசுப்பிரமணியம், ராஜமாணிக்கம், பிரான்சிஸ். திரவியம், ஆகியவர்களால் பேசப்பட்டு இரவு 10மணிக்கு வந்தனங்கூறப்பட்டு இனிது முடிந்தது. (ஒரு நிருபர்)

---

### புதியம்புத்தூர் சுயமரியாதை சமதர்ம சங்கம்.

---

ஷை சங்க சார்பில் ஷையூர் தோழர் சி. சு. கருப்பசாமி அவர்கள் கடையில் தோழர் மு. தி. ஸ்தேவான நாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

"ஷை சங்கத்தை மகாண சுயமரியாதைச் சங்கத்துடன் சேர்த்துக்கொள்ளும்படியும், தூத்துக்குடி சுயமரியாதைச் சங்கமும்; இச்சங்கமும் சேர்ந்து சமதர்ம பிரசாரம் செய்து சமதர்மக் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

ஒரு நிருபர்

### கும்பகோணத்தில் சுயமரியாதைத் திருமணம்.

மேலப் பெரும் பள்ளம் தோழர் எஸ். பி. ராஜா அவர்களின் திருச்செல்வி அலமேலு அம்மாளுக்கும், கும்பகோணம் ஆள்வான் கோவில் தெரு தோழர் மருதமுத்து அவர்களின் திருச்செல்வன், தோழர் தேசிங்கு அவர்களுக்கும் சுயமரியாதைவாலிபர் சங்கத்தின் ஆதரவில் 12-2-33 ஞாயிற்றுக்கிழமை காலை மணி 10-30-க்கு தோழர் சாமி, சிதம்பரனார் தலைமையில், தோழர் கெ. கெ. நீலமேகம் திருமணத்தை முடித்து வைத்தார். வெளியூரிலிருந்தும் உள்ளூரிலிருந்து பல கனவான்கள் வந்திருந்து சிறப்பித்தார்கள். ஒரு நிருபர்

---

### "வெடிகுண்டு" நேயர்களுக்கு.

நமது பத்திரிகைக்கு பதிப்புரிமைப் பொறுப்பதற்காக கனம் ஜில்லா மாஜிஸ்திரேட் அவர்களிடம் விண்ணப்பம் செய்து சுமார் ஒன்றரை மாதகால மாகிறது. அநேகமாய் அடுத்த வாரத்திற்குள் பதிப்புரிமை கிடைக்கப் பெற்றதும், அதே வாரத்திலிருந்து வழக்கம் போல் பிரதி ஞாயிறு தோறும் வெளிவருமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம் என்று ஆசிரியர் ஆனந்தம் எழுதுகிறார்.

---

### தேனியில் திருத்த திருமணம்.

8-2-33ந் தேதி புதன்கிழமை ஆண்டிபட்டி தோழர் மாரியப்பன் அவர்கள் தங்கை காளியம்மாளுக்கும், தோழர் வள்ளிமுத்து அவர்களுக்கும் எவ்வித சடங்குகளுமின்றி திருமணம் நடைபெற்றது. (ஒரு நிருபர்)

---

## மதிப்புரைகள்.

### வரவு செலவு ரிப்போர்ட்.

கூத்தநல்லூர் சன்மார்க்கத்தொண்டர் சபையின் 1932-ம் வருடத்திய வரவுசெலவு ரிப்போர்ட்டும் சட்டதிட்டங்களும் சேர்த்து அச்சிடப்பெற்ற புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இதில் ஷை சங்கத்தின் ஒரு வருஷத்திய வரவு செலவு கணக்கும் சங்க நிர்வாகஸ்தர்களின் பெயரும், விதிகளும் காணப்படுகின்றன.

### "பாரத லங்கா"

இலங்கை நாடார் மகாஜன சங்கத்தாரால் வெளியிடப்படும் "பாரதலங்கா" என்ற மாதசஞ்சிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். இதில் நாடார் மகாஜன சங்க சம்பந்தமான பல செய்திகளும், சமூக முன்னேற்றத்திற்குரிய கட்டுரைகளும் காணப்படுகின்றன.

உள்நாடு சந்தா ரூ. 1-4-0.
வெளிநாடு ரூ. 1-8-0.

விலாசம்:—

"பாரத லங்கா"
77-மலிபான்தெரு கொழும்பு.

## மதுரை.
### சுயமரியாதைச்சங்கம்.

20-2-33 திங்கட்கிழமை மாலை 6மணிக்கு, மதுரை நகரசபைக்கு கௌன்சிலராக 13வது வார்டுக்கு போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்ட தோழர் ஆ. அ. ஆறுமுகம் அவர்களுக்கு ஒரு தேனீர் விருந்து நடைபெற்றது. அதுசமயம் மதுரை நகரசபை கௌன்சிலர்கள்பலரும், மற்றும் உள்ளூர் பிரபலஸ்தர்களும், வக்கீல்களும், வியாபாரிகளுமாக சுமார் 120 பேர்வரை விஜயம் செய்திருந்தார்கள். விருந்துக்குப்பின் அமெரிக்கன் காலேஜ் பிட்டயர்டு பிரின்ஸ்பாலும்கௌன்சிலருமான தோழர் பீட்டர்ஜசக் பி. ஏ. எல். டி. அவர்களது தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. சுயமரியாதை சங்கக்காரியதரிசிகளில் ஒருவரான தோழர் ஏ. எஸ். அருணாசலம் சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் திட்டவேலைகள் இன்னவையென்பதை எடுத்துக்கூறி தங்களுடைய பிரதிநிதியாகிய தோழர் ஆறுமுகம் அவர்கள் கொண்டு வருகிற தீர்மானங்களை சகோதர கௌன்சிலர்கள் ஆதரிக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டார். பின்வக்கீல்களானதோழர்கள் பி. ரெங்கசாமிராயர், முகமதுசுல்தான் நாராயணன் இவர்கள் விருந்தினரை பாராட்டி பேசினார்கள்.

விருந்தினரான தோழர் ஆறுமுகம் பின் பதில் கூறும்போது இச்சங்க காரியதரிசிகளே தன்னை நகரசபைக்கு நிற்கும்படி கேட்டுக்கொண்டதாயும், தான் சுயமரியாதை இயக்க வேலைத் திட்ட உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டே தேர்தலுக்கு நின்றதாயும் போட்டியாக நின்றவர்களை சமாதான படுத்திய தோழர் உமாபதி அய்யர் அவர்களுக்கு தனது நன்றியை செலுத்துவதாயும் தான் சுயமரியாதை சங்கத்தார் தீர்மானிக்கிற தீர்மானங்களை முனிசிபல் கௌன்சிலால் பிரரேபிக்க போவதாயும் சகோதர கௌன்சிலர்கள் அதை ஆதரிக்க வேண்டுமென்றும், கேட்டுக் கொண்டார்கள். பின் தலைவர் முடிவுரை கூறியதும் காரியதரிசி தோழர் வெங்கிடசாமி அவர்களால் வந்தனம் கூற கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

---

## தென்டபட்டு.
### தமிழர் சமரச சங்கம்.

இச்சங்க வளர்ச்சியை முன்னிட்டு கோலாலம்பூர் ஜெனரல் போஸ்ட் ஆபீசில்வேலைபார்த்து வரும்சங்கஉறுப்பினரான தோழர் ஆர். குப்புசாமி அவர்கள் இரண்டு ரூபாய் நன்கொடை அனுப்பியுள்ளார்கள். அன்னாருக்கு; எமது நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்ளுகிறோமென, காரியதரிசி எஸ். குருநாதன் எழுதுகிறார்

## திருச்சியில் தீண்டாமை விலக்கு கூட்டம்.
### சுயமரியாதைத் தோழர்கள் சொற்பொழிவு.

தீண்டாமை விலக்கும் ஆலயப் பிரவேச மசோதாக்களுக்கு ஆதரவு அளிப்பதாகவும், இம் மசோதாக்களைப்பற்றிய பொதுஜன அபிப்பிராயம் ஏற்கனவே பெற்றுவிட்ட படியாலும், இனி இதற்காக மசோதாவைத் தாமதிக்காமல், காலதாமதமின்றி அங்கீகாரம் செய்யப் படுவதற்கான முறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக இரு தீர்மானங்கள் நேற்று மாலை திருச்சி டவுன் ஹால் முன்னிலையில் வக்கீல் தோழர் டி.வி. சோமசுந்திரம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிய பொதுக் கூட்டத்தில் நிறைவேறின தீர்மானங்களை ஆதரித்து தோழர்கள். டி. எஸ். எஸ். ராஜன், என். ஹாலாஸ்யம் அய்யர்; சங்கிலியா பிள்ளை இவர்கள் பேசினார்கள்

சுயமரியாதைச் சங்கக் கொள்கையை கொண்டுள்ள தோழர்கள் அ. பொன்னம்பலனார், ப. ஜீவானந்தம் ஆகிய இருவரும் தங்களுக்கு தீண்டாமை விலக்கில் அதிக சிரத்தை உண்டு என்றும், ஆனால் தோழர் காந்தி இயக்கத்தால் அது விலகாதென்ற நம்பிக்கை இருக்கிற தென்றும் இப்போது நடந்து வரும் கிளர்ச்சி ஒரு அரசியல் சூழ்ச்சியாகுமென்றும், ஜாதிபேதங்கள் (வருணாசிரமம்) அவற்றிற் குறிய அடையாளங்கள் முதலியன ஒழியவேண்டும் என்றும், காந்தி ஆதித்திராவிடர்களை "ஹரிஜனங்களென்றும்" அழைப்பது ஜாதிப் பிரிவினையை பலப்படுத்துகிறதாகும் என்றும் உண்மையில் வாலிபர் இயக்கத்தால் தான் தீண்டாமை விலகு மென்றும் கூறினார்கள்.

---

## சேலம் சுயமரியாதைச் சங்கம்.

சேலம் செவ்வாய்ப் பேட்டை சுயமரியாதைச் சங்கத்தில் வைசங்கபார்க்கில் 29-2-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு ஓர் சுயமரியாதைப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் ஏ. எம். பாலு அவர்களின் தலைமையில் சுயமரியாதைத் தோழரான ஜலகண்டாபுரம், எஸ். ராமநாதன் அவர்கள் "சுயமரியாதை இயக்கத்தின் அவசியம் என்னும் விஷயத்தைப் பற்றி வெகுவிரிவாக சொற்பொழிவாற்றினார். பின்னர் தலைவர் முடிவுரையுடன் வந்தனத் தோடு கூட்டம் இரவு 8-30மணிக்கு கலைந்தது.

ஒரு நிருபர்.

---

## சுயமரியாதை இளைஞர் மன்றம் சென்னை.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் வாராந்திரக்கூட்டம்வழக்கம்போல் 26-2-33 ஞாயிறு பகல் 2 மணிக்கு மன்றத்தின் காரியாலயத்தில் தோழர் டி. இராதா கிருஷ்ணன் தலைமையில் நடை பெற்றது. அது சமயம், தோழர்கள் என். பி. பத்மநாபன், என். வி. டி. சாமி, ஆர். கோவிந்தன், சாமி, சதாசிவம் முதலியோர் "சுயமரியாதையும், புரோகித சடங்குகளும்" என்பது பற்றி பேசினார்கள்.

ஒரு நிருபர்


## மணமகள் தேவை.

அரசாங்க உத்தியோகத்தில் மாதம் 50ரூ சம்பளம் வாங்கக் கூடியவரும், சுமார் 29, 30 வயதினையுடைய வாலிபருக்கு பெண்தேவை. பெண்சிறிது ஆங்கிலம் கற்றிருத்தல் அவசியம், எக்குலமாயினும்சரி, வயது 22க்கு மேற்படாமலிருக்க வேண்டும் விருப்ப முள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. V. c/o Kudi Arasu
Erode

## ஏஜண்டுகள் தேவை

சென்னை மாகாணத்தில் சிறந்த தேசிய "வெடிகுண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு இன்றே நல்ல ஊருக்கு வாரந்திர பிரதிகளுக்கு அட்வான்ஸாக முன்பணம் கட்டி நமது ஏஜண்டாக பதிவுசெய்துக்கொள்ளுங்கள். ஏஜண்டுகளுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசாவீதம் கமிஷன் கொடுக்கப்படும். வருட சந்தா ரூ2—0—0 ஆறுமாதத்திற்கு 1—1—0 வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ3—0—0. தனிப்பிரதி விலை அரையணா. முன்பணம் கட்டாத எந்தஆர்டர்களையும் அங்கிகரிக்கப்படமாட்டா.

மானேஜர்
"வெடிகுண்டு"
தெற்குவாசல், மதுரை.

## "தமிழன்"
### ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

## ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

## ஜார்ஜ் பெர்னாட்ஷாவின்,
### அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகைபிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 3—0—0. தபால் செலவு வேறு.

## மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

## இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

## சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் $6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2}$ - $6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லபிள்ளை என்று சொல்லுகிறார்களே ஒழிய கஷ்டப்படுகின்ற மக்களுடைய நலத்தை கவனிக்க ஆரம்பித்தால் நம்மை விரட்டவும் நம்மை விட்டு ஓட்டம் பிடிக்கவுமே செய்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் நம்மைத்தூற்றவும் ஆரம்பிக்கிறார்கள். இந்தக் கூட்டங்களுக்கு உழைத்தது காட்டில் கத்தியது போலவே ஆய்விட்டதுடன் கஷ்டப்படுபவர்களுக்கு யாதொரு பயனும் ஏற்படாததோடு சோம்பேறித்தன்மைக்கும் முதலாளித்தனத்துக்குமே ஆக்கமளிக்கத்தக்கதாய்விட்டது.

இதனால்தான் இப்போது கஷ்டப்பட்டு உழைத்தும் முன்னுக்கு வராமலும் தாழ்த்தப்பட்டும் இழிவுபடுத்தப்பட்டும் இருக்கும் மக்களுக்கு உழைக்கவேண்டியது மனிதர் கடமை என்று உணர்ந்தேன். அதுதான் சுயமரியாதை இயக்கம் என்பதாம்.

எந்த மதமும் கடவுளும், அரசாங்கமும், ஏழைகள் தலையில் தான் சவாரி செய்கின்றனவேஒழிய முதலாளி மார்களை ஏன் என்றே கேள்ப்பதில்லை. அவர்களுடைய விருத்திக்கு உதவி செய்தே வருகின்றன. கேவலம் ஒரு தீண்டாமை என்கின்ற காரியம் எவ்வளவு அக்கிரமமென்றும், அயோக்கியத்தனமானதென்றும், ஆதாரமற்றதென்றும் எல்லா மனிதனுடைய அறிவுக்குபட்டிருந்தும் இன்று அதை ஒழிப்பது என்றால் எவ்வளவு கஷ்டமாய் இருக்கின்றது என்று பாருங்கள்?

தீண்டாமை ஒழியவேண்டுமா? வேண்டாமா? என்ற பிரச்சினையை முடிவு செய்ய "சாஸ்திரம் என்ன சொல்லுகின்றது? சாஸ்திரிகள் என்ன சொல்லுகின்றார்கள்?" என்று பார்ப்பதும் சாஸ்திரிகளுடன் தர்க்கம் செய்வதும் புத்தியுள்ள காரியமென்றோ நாணயமான காரியமென்றோ சொல்ல முடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

சாஸ்திரம் பார்ப்பதென்றால் என்ன அர்த்தம். இன்றைய தினம் தீண்டாமையில் கஷ்டப்படும் மக்களுடைய கஷ்டத்தை நீக்குவதற்காக இன்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன் இருந்த மக்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பார்ப்பது என்பது தானே அதன் அர்த்தம். கஷ்டப்படுகின்ற பறையர், சக்கிலியர்கள் முதலிய மக்களின் கஷ்டத்தை நீக்க சோம்பேறியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்து தொந்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கும் சாஸ்திரிகளைப் போய் கேள்ப்பது என்பதும் அவர்களிடம் தர்க்கித்துக் கொண்டிருப்பதும் யோக்கியமான காரியமா என்று யோசித்துப்பாருங்கள். இந்தக் காரியங்களால் சாஸ்திரங்களையும் சாஸ்திரிகளையும் ஒப்புக்கொள்ளுகின்றோம் என்றுதானே அர்த்தம். இன்றைய மனிதசமூக முன்னேற்ற காரியங்களில் சாஸ்திரங்களுக்கும், சாஸ்திரிகளுக்கும் என்ன வேலை இருக்கிறது? பாடுபடும் மனிதனின் சுகதுக்கத்தைப்பற்றிப் பேசபாடுபடுபவனுக்கு உரிமையே ஒழிய சோம்பேறிகளுக்கு எப்படி உரிமை உண்டாகும். ஆகவே இன்றைய நியாயமும், அதிகாரமும் சோம்பேறிகள் கையில் இருக்கின்றது என்பதற்கு இதை விட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இந்த நிலைமையை அடியோடு அழிக்கவேண்டும் என்றுதான் சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றது. எல்லா மதங்களினுடைய யோக்கியதையும் எல்லா அரசாங்கத்தினுடைய யோக்கியதையும் இப்படித்தான் இருக்கின்றன. இந்தக்கொடுமையுள்ள தீண்டாமை என்பது இந்த மனித சமூகத்தில் எவ்வளவு காலமாய் இருந்து வருகின்றது? இதை ஒழிக்க இதுவரை எந்தமதம் எந்த அரசாங்கம் பாடுபட்டு ஒழித்தது? கிறிஸ்துவ மதமும், இஸ்லாம் மதமும் தங்கள் மதத்துக்கு வந்துவிட்டால் தீண்டாமை ஒழிந்துபோகும் என்கின்றனவேயொழிய இந்த அக்கிரமம் நாட்டில் எப்படி இருக்க முடியும்? ஏன் இருக்கின்றன? என்கின்ற கவலைகள் அவைகளுக்கு இல்லை. இருக்குமானால் கேவலம் ஏதோ அற்ப காரியங்களுக்கெல்லாம் உயிரை விடவும் தலையை வாங்கவும் மக்களுக்கு போதிக்கின்ற மதங்கள் இக்கொடுமைக்கு உயிர் விட ஏன் துணிந்திருக்கக்கூடாது. அரசாங்கங்களும் இந்த தேசத்தில் வெகுகாலமாக சுமார் 5000 வருஷமாக இருந்து வருவதாக சரித்திரங்கள் காணப்படுகின்றன. ஒரு அரசாங்கமும் இந்த தீண்டாமையை ஒழித்து மனிதனை மனிதனாக்கச் செய்யவே இல்லை. அநேக பெரிய காரியங்களையும் நாகரிக காரியங்களையும் செய்து சாதித்ததாக கதைகள், புராணங்கள் சரித்திரங்கள் எழுதிவைத்து மகிழ்கின்றன. ஆனால் தீண்டாமை விஷயத்தில் அவை செய்ததென்ன என்றால் தலைகுனிந்துதான் ஆகவேண்டும். அதுபோலவே எந்தக்கடவுளாவது இந்த மாதிரியானஒரு கொடுமையைநிவர்த்தித்ததா? இல்லையே. ஆனால் மதமும் அரசாங்கமும் கடவுளும் எல்லா மக்களுக்கும் பொது என்று வாயில் பேசுகின்றன வெட்கமில்லாமல் எழுதிக் கொள்ளுகின்றன. அந்தப்படி எல்லா மக்களுக்கும் பொதுவாய் காரியத்தில் என்ன செய்திருக்கின்றன? தீண்டாமை என்கின்ற இந்த ஒரு விஷயத்தில் ஒன்றும் இதுவரை செய்ய முடியாத மதங்களும் அரசாங்கங்களும் கடவுள்களும் இனி ஏழைகளுக்கு அதாவது செல்வவான்களால் கொடுமைப் படுத்தப்படும் ஏழைகளுக்கு என்ன காரியத்தைச் செய்துவிட முடியும்? மதமும், கடவுளும் அரசாங்கங்களும் மேல் ஜாதிக்காரர்களுக்கும், முதலாளிமார்களுக்கும் கையாள்களேயாகும். ஆதலால் தான் ஜாதிக்கொடுமையும், பணக்காரத்திமிரும் ஒழிய வேண்டுமானால் அவைகளின் ஆதாரங்களான கடவுள், மதம் அரசன் ஆகியவை சம்மந்தமில்லாமல் ஒரு ஆட்சியால் முடியும் என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகின்றது. அதன்மீது கோபித்து என்ன செய்ய முடியும். அதில் கலந்துள்ள சிலரை தூக்கில் போடலாம். சிறை வைக்கலாம். அந்த உணர்ச்சியை ஒழித்துவிட முடியுமா? என்று யோசித்துப்பாருங்கள். இன்று உலகில் நாகரீகம் பெற்று முன்னணியிலிருக்கும் தேசங்களிலெல்லாம் இந்த உணர்ச்சிகள் தான் தாண்டவமாடுகின்றன. ஆனால் படித்த மக்கள் என்பவர்களும், பணக்காரர்கள் என்பவர்களும், பார்ப்பனர், பாதிரிகள் என்பவர்களும் இதற்கு விரோதமாகத்தான் இருக்கின்றார்கள். இதனால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்பது உறுதி. எப்படியெனில் பணக்கார ஆதிக்கமும், பாதிரி ஆதிக்கமும் மேலோங்கி இருந்த ருஷிய தேசத்தில் அவைஒழிந்தவுடன்அங்கு இன்றுதீண்டாமையும்இல்லை. பணக்காரக்கொடுமையும்இல்லை. இந்தநிலை அந்த தேசத்துக்கு எப்படி வந்தது என்று கேட்டீர்கள். அங்கு முதலில் மதத்தையும், கடவுளையும் ஒழித்த பிறகுதான் ஏற்பட்டது என்பதை நீங்கள் யாவரும் உணர்ந்திருக்கலாம். இந்தக்காரணங்களால் தான் நாங்கள் மதத்தையும், கடவுளையும் குற்றம் சொல்லுகின்றோமே ஒழிய வேறில்லை. மற்றபடி குரோதம் கொண்டோ, வெறுப்புக்கொண்டோ அல்ல. ஆதலால் நீங்களும் எவ்வித குரோதமும், துவேஷமும் இல்லாமல் பொறுமையாய் நடு நிலையிலிருந்து யோசித்துப்பார்த்து உங்களுக்குத்தோன்றுகிறபடி செய்யுங்கள்என்பதாகப் பேசினார்.

---

**குடி அரசு**
**எங்கும் துலங்குக!**

**முடி அரசு**
**எங்கும் வீழ்க!!**


## The Rational Books Publishing Society Ltd.

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு:— விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.

# அமுத ரத்னாகரம்.

(சிறந்த தாது புஷ்டி லேகியம்)

ஐம்பொறிகளுக்கும் நல்ல வலுவைக் கொடுத்து, உயிருக்கு சிறந்த சக்தியைப்பெருக்கி, ஆயுளை வளர்க்கும். 40 நாள் சாப்பிட்டபின் உடலின் நிறை அதிகப்படா விட்டால் பணம் வாபஸ் தருகிறோம்.

40 நாளுக்கு ரூ. 4 20 நாளுக்கு ரூ. 2—4—0.

# இன்பமணி.

சுமசகம், தாது நஷ்டம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகளை நீக்கி, பூரண இன்பசுகம், வாலிபத்தன்மை, திட காத்திரம் ஆகியவைகளை அளிப்பதில் இதற்கிணையானவை வேறொன்றும் கிடையாது. 30 மாத்திரை ரூ. 5—0—0.

# ஜீரணதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

உண்ட உணவைச் செரிக்கச் செய்து தினந்தோறும் மலத்தைக்கழிக்கும். மலச்சிக்கலினால் உண்டாகும் நோய்கள் எதுவாக இருந்தாலும் தவறாமல் குணமாக்கும். பசியின்மை, நெஞ்செரிவு, புளியேப்பம், வயிற்றுவலி, குன்மம், வாந்தி, அஜீரணம், தூக்கமின்மை, அசதி ஆகிய நோய்களையும் கண்டிப்பாய் நீக்கும். விலை ரூ. 2.

சித்தாஸ்ரம வைத்தியசாலையில் செய்யப்பட்டது. சகல வியாதிகளுக்கும் உத்தரவாதமும், குணமுமுள்ள மருந்துகளிருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள். மலாய் நாட்டு வாசிகள் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்ட்: அருணகிரி அண் கோ.,

தபால் பெட்டி 222, நெ. 49 லிங்கசெட்டி தெரு, சென்னை.



டாக்டர்

# சிங்காரம் அவர்களின்

## மஹா சந்தனாதித் தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது

கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

| | |
|---|---|
| கண் எரிச்சல் | பீனிசம் |
| கண் சிவப்பு | தலை மயக்கம் |
| கண்ணில் நீர்வடிதல் | தலைப் பொடுகு |
| கண் அரிப்பு | சொரி சிரங்கு |
| கண் பார்வைக்குறைவு | தலைமயிர் உதிர்தல் |
| கண் கூச்சம் | நாள்பட்ட தலை நோய் |
| கண்ணில் பீளை சாருதல் | முதலிய பல வியாதிகளை ஆசசரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை. |
| மேக நீர், வெள்ளெழுத்து | |
| ஒருத்தலை நோய் | |
| கை கால் எரிச்சல் | |
| மூலச்சூடு | |
| அஸ்திசாக்கை | |
| வெட்டைச்சூட்டால் உண்டாகும் நிரேகக் காந்தல் | 24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0 |
| காது நோய், காது மந்தம் | 12 ,, ,, ரூ. 2-2-0 |
| மண்டை இடி | |

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.



Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

| | |
|---|---|
| Price per copy ... ... | Rs. 1—0—0 |
| For Subscribers of Kudi Arasu | As. 0—8—0 |

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.



## சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி செலவு ரூ. 0-5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. பிரதி ஒன்றுக்கு விலை அணா 0—6—0

மானேஜர்

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. சிதம்பர ரகசியம் ... 0—8—0
2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
4. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
5. ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ... 0—6—0
6. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை 0—6—0
7. மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ 4—0—0
ரிவோல்ட் ஒருவருஷ மாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.



# இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழ்ப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோகம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளை கொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

**மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.**



சுயமரியாதை
### தங்கரத்தினத் தெப்பாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை ரூ. 0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட ,, 0-12-0
,, 100க்கு ,, ,, 5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அணா ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. K. மந்தரன், கவுண்டர்பட்டி.
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி].

### "புரட்சி ஓங்குக! பொதுவுடைமை தோணுக!!"



### "சன்மார்க்கன்"
வாசக நேயர்களுக்கு

இடமாறுதலுக்காக எதிர்பார்த்திருந்த அரசாங்கத்தாரால் அனுமதி கிடைத்து விட்டது. இனிகாணிதுவரையும் விட்டுப்போன பிரதிகளுடன் பக்கம் அதிகப்படுத்தி அடுத்ததிங்களிலிருந்து பத்திரிகை தவறாது வெளிவரும்

ஆண்டு சந்தா:—
உள்நாடு ரூ 1—0—0
வெளிநாடு ரூ-1—8—0.
தனிப்பிரதி ரூ-0—2—0.

(ஆசிரியர்)
சுவாமி சிவநேசம்.
"சன்மார்க்கன்" திண்டுக்கல்



உங்கள்.

### கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**"Sri" Works**
**Beadon St. Calcutta.**



# பண்டிட் ஆனந்தரின்,
## அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ண அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

**மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,**
221, தங்கசாலை வீதி, சென்னை.

# குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

## மதமும், லெனினும்.

விலை அணா 0—4—0

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவற்று வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது மிக சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.

விலை அணா 0—1—0.

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

'கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேறிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெரியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பரஞ்சிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

## சாமிகளின் அடிமை.

விலை அணா. 12.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.